CHRI 2015

# காவல்துறையைப் பற்றி நீங்கள் அறிய விரும்பும் ஆனால் கேட்க அஞ்சும் 101 விஷயங்கள்





CHRI
Commonwealth Human Rights Initiative
working for the **practical realisation** of *human rights* in the countries of the Commonwealth

# காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு

CHRI காமன்வெல்த் நாடுகளுக்கான சுதந்திரமான, கட்சி சார்பற்ற, சர்வதேச, அரசு சாரா மனித உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பாகும். 1987ல் பல காமன்வெல்த் நாடுகளின் தொழில்முறை கூட்டமைப்புகளால் இது தொடங்கப்பட்டது. காமன்வெல்த் அமைப்பு பொதுவான கோட்பாடுகள் மற்றும் சட்ட கொள்கைகளை கொண்டிருந்தாலும் மனித உரிமைகளை பொறுத்தவரை குறைந்த கவனமே உள்ளது.

மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு, பின்பற்றுதல், ஹராரே கொள்கைள் (Harare Principles), ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனம், மற்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை சட்டங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதே CHRIன் நோக்கமாகும். தனது அறிக்கைகள் மற்றும் அவ்வப்போதைய விசாரணைகள் மூலம், காமன்வெல்த் நாடுகளில் நடக்கும் மனித உரிமை மீறல்களை CHRI தொடர்ந்து கவனத்திற்குள்ளாக்குகிறது. மனித உரிமை மீறல்களை தடுக்கும் பொருட்டு, காமன்வெல்த் தலைமை செயலகம், உறுப்பு நாடுகளின் அரசுகள் மற்றும் சமுதாய இயக்கங்களிடம் CHRI தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தனது பயிற்று திட்டங்கள், கொள்கை பேச்சு வார்த்தைகள், ஆராய்ச்சிகள், எடுத்துரைத்தல் மற்றும் ஒருங்கிணைப்படி மூலம் மனித உரிமைகளை முக்கிய விஷயமாக CHRI ஊக்கப்படுத்தி முன்னெடுத்துச் செல்கிறது.

CHRIயின் தலைமை அலுவகம் புதுதில்லியிலும், மற்ற அலுவகங்கள் ஆக்ராவிலும், லண்டனிலும் செயல்படுகின்றன.


**சர்வதேச அறிவுறுத்து ஆணையம் : யஷ்பால் காய் - தலைவர்**
**உறுப்பினர்கள் : கிளேர் டூபே, ஆலிசன் டக்ஸ்பெரி, வஜாஹத் ஹபீபுல்லா, விவேக் மாரூ, எட்வேர்ட் மார்ட்டிமர், சாம் ஒகுட்ஜெட்டோ, மாஜா தாருவாலா**

**நிர்வாகக்குழு (இந்தியா) : வஜாஹத் ஹபீபுல்லா - தலைவர். உறுப்பினர்கள் : பி.கே சந்திரஷேகர், நிதின் தேசாய், சஞ்சோய் ஹஜாரிகா, கமல் குமார், பூனம் முத்ரேஜா, ரூமா பால், ஜேகப் புன்னூஸ், ஏ.பி ஹாஹ், மாஜா தாருவாலா**

**நிர்வாகக்குழு (கானா) : சாம் ஒகுட்ஜெட்டோ - தலைவர் உறுப்பினர்கள் : அகோடா அம்பாவ், கோப்பீ க்வாஷிகா, யஷ்பால் காய், வஜாஹத் ஹபீபுல்லா, ஜூலியட் துவாக்லி, மாஜா தாருவாலா**

**நிர்வாகக்குழு (யூ.கே) : கிளேர் டூபே - தலைவர் உறுப்பினர்கள் : ரிச்சர்ட் போர்ண், கேதரின் ஓபரயின், மீனாக்ஷி தர், ஜோஆனா எவர்-ஜேம்ஸ், பிரான்சிஸ் ஹேரிசன், சதாகத் காத்ரி, நெவில் லிண்டன், சஷி நாதன், ரீதா பெயின், மைகெல் ஸ்டோன்**


**CHRI Headquarters, New Delhi**
55A, Third Floor
Siddharth Chambers
Kalu Sarai
New Delhi 110 016, INDIA
Tel: +91-11-4318-0200, 4318-0201
Fax: +91-11-4618-0217
info@humanrightsinitiative.org

**CHRI United Kingdom, London**
Institute of Commonwealth Studies
28, Russell Square
London WC1B 5DS
UK
Tel: +44-020-7-862-8857
Fax: +44-020-7-862-8820
chri@sas.ac.uk

**CHRI Africa, Accra**
House No.9, Samora Machel
Street Asylum Down
Opposite Beverly Hills Hotel
Near Trust Towers,Accra, Ghana
Tel: +00233-21-971170
Tel/Fax: +00233-21-971170
chriafr@africaonline.com.gh

www.humanrightsinitiative.org

# காவல்துறையைப் பற்றி நீங்கள் அறிய விரும்பும் ஆனால் கேட்க அஞ்சும் 101 விஷயங்கள்




எழுதியவர்

நவாஸ் கோத்வால்

மாஜா தாருவாலா

# முன்னுரை

நாம் தினமும் காவல் துறையுடன் தொடர்பில் இருக்கிறோம். நாம் அவர்களை சாலைகள் கட்டுப்பாடு, முக்கியஸ்த்தர்கள் பாதுகாப்பு, கூட்டம் தடுப்பது, நீதிமன்றத்திற்கு மக்களை கொண்டு செல்லும் பொழுது காப்பது, சாட்சியம் அளிப்பது, புகார் தொடுப்பது அல்லது குற்றவாளிகளை அல்லது தீவிரவாதிகளை எதிர்கொள்வது போன்ற வேலைகளில் மும்முறமாக ஈடுபட்டிருப்பதைப் பார்ப்போம். மேலும் காவல்துறை பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து உண்டு. ஆனால் பெரும்பாலும் அது ஒரு மெச்சத்தக்க கருத்தாகவிருப்பதில்லை. உண்மையில் அதிகப்படியான மக்களுக்கு காவல்துறை பற்றி மிக குறைவாகவே தெரியும்.

மக்களாட்சியில் காவல்துறை அரசாங்கத்தின் முகவராக மக்களை ஒடுக்குவதற்காக அமைக்கப்பட்டது அல்ல. அது ஒரு தீயணைப்புத்துறை, கலால் துறை போன்ற நம் அனைவரின் உரிமையைக் காக்கும் ஒரு அத்தியாவசிமான சேவை ஆகும். அதிகாரவர்க்கத்தைப் போல், காவல்துறையும் மக்களால் நீதி கொடுக்கப்பட்டு மக்களின் சேவைக்காக உருவாக்கப்பட்டது.

காவல்துறைக்கு மக்களிடம் கடமை உள்ளது போல் மக்களுக்கும் காவல் துறையிடம் கடமை உள்ளது. ஒரு பொறுப்புள்ள குடிமகன் அவர்களை கண்டு வெறுத்து பயந்து அல்லது கஷ்டம் வரும் காலத்தில் மட்டும் அணுகுவது சரியல்ல. மக்களும் காவல் துறையும் இணைந்து செயல்பட்டால் தான், நீதியை நிலைநாட்ட முடியும். அவர்களது வேலை மற்றும் சவால்களைப் புரிந்து கொள்வதும், என்ன செய்கிறார்கள், எப்படி செய்கிறார்கள், எவ்வாறு செய்கிறார்கள், அவர்களது உரிமைகள் கடமைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது மிக அவசியம். ஒவ்வொருவரும் தங்கள் உரிமைகள் கடமைகள் என்னென்ன என்பதை அறிதல் வேண்டும். அப்போதுதான் காவல் துறையானாலும், குடிமக்களானாலும், சட்டத்தை மீற இயலாது. இதுவே சட்டத்தின் ஆட்சியெனப்படும்.

இந்த சிறிய புத்தகம் காவல்துறை பற்றி தெரிந்துகொள்ள உதவும். அடுத்த முறை காவல்துறையினர் ஏதேனும் தவறு செய்தால், நீங்கள் அமைதியாய இல்லாமல் அதற்கெதிராக குரல் எழுப்ப இந்த புத்தகம் உதவும். நாம் ஒரு விஷயத்தைப் பற்றி அறிந்திருந்தால் தான் தன்னம்பிக்கையுடன் பேச முடியும். அவ்வாறு பேசும்பொழுதுதான் தவறுகள் நடப்பது மாறும். இந்த புத்தகத்தின் மூலம் நாம் அனைவரும் காவல் துறையைப் பற்றியும், நம் உரிமைகளைப் பற்றியும், தெரிந்துகொண்டு அந்த அறிவைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான ஒரு நல்ல சேவையைப் பெறமுடியும்.

**கருத்தாக்கம், தோற்றமைப்பு மற்றும் வடிவமைப்பு : செந்தில்குமார் பரமசிவம்**
**விளக்கப்படங்கள் : சுரேஷ் குமார்**

**1. எதற்காக காவல்துறை உள்ளது?**



குடிமக்களுக்கு அரணாக இருப்பதற்காகவும், பாதுகாப்பு தருவதற்கும் நாம் காவல் துறையைக் கொண்டுள்ளோம். சமுதாயத்தில் அமைதி மற்றும் ஒழுங்கை பராமரிக்கவும் குற்றங்களை தடுக்கவும், கண்டறியவும் காவல்துறை உள்ளது. சட்டத்தை அமலாக்கவும், காவல்துறை உட்பட அனைவரும் சட்டத்தை பின்பற்றுதலை உறுதிபடுத்தவே காவல்துறை உள்ளது.

**2. காவல்துறையின் கடமைகள் என்ன?**



கையும் களவுமாக பிடித்தல்

காவல் துறைக்கு பல்வேறு கடமைகள் உள்ளன. குற்றங்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், அவற்றைக் கண்டறிந்து முறையாக விசாரணை செய்தல் போன்றவை காவல் துறையின் தலையாய கடமையாகும். நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய வகையில் சாட்சியங்களின் அடிப்படையிலான நியாயமானதொரு வழக்கை உருவாக்குவதும் காவல் துறையின் கடமையாகும். சமுதாயத்தில் ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கை பராமரித்தல் காவல் துறையின் பொறுப்பாகும். அதன்பொருட்டு சமுதாயத்தில் நிகழும் அனைத்து விஷயங்களை சேகரித்தலும் காவல்துறையின் கடமையாகும்.




**3. காவல்துறை அதிகாரங்கள் என்பவை யாவை?**

வெவ்வேறு வகையான பல அதிகாரங்கள் சட்டத்தால் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்வதிகாரங்கள் சட்டத்தால் வழங்கப்பட்ட வழிமுறைகளின்படி மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும். கைது செய்தல், சோதனை செய்து கைப்பற்றுதல், குற்றங்களை விசாரணை செய்து சாட்சியம் கேட்டறிதல், சந்தேகத்திற்குரியவர்களை விசாரித்தல், ஒழுங்கற்ற மக்கள் கூட்டத்தை கலைந்து போகச்செய்தல் மற்றும் சமுதாயத்தில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் ஆகியவை காவல் துறையின் அதிகாரங்களாகும். இந்த அதிகாரங்கள் கண்டிப்பாக சட்டத்தால் வகுக்கப்பட்ட வழிமுறைகளே தவிர வேறு எந்த வழியிலும் செயல்படுத்தக்கூடாது. தாங்கள் நினைத்ததையெல்லாம் அல்லது விரும்பியதெல்லாம் காவல்துறை செயல்படுத்த இயலாது. ஏதேனும் அதிகார துஷ்பிரயோகமோ அல்லது கடமை தவறுதலோ இருப்பின்,

அவை ஒழுங்கு மீறல் அல்லது உரிமை மீறல் அல்லது குற்றமாகக் கருதப்பட்டு, அதில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரி தண்டனைக்குரியவராவார்.

**4. மொத்த இந்தியாவிற்க்கும் ஒரே ஒரு காவல் துறைதான் உள்ளதா?**

இல்லை, ஒவ்வொரு மாநிலமும் தங்கள் அரசின் கட்டுப்பாட்டில், தங்களுக்கென ஒரு காவல்துறையைக் கொண்டுள்ளன. எனவே இந்தியாவில் பல்வேறு காவல்துறைகள் உள்ளன. மேலும் தலைநகர் டெல்லி, சண்டிகர், புதுச்சேரி, டாமன் மற்றும் டையூ, லச்சத்தீவுகள், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, மற்றும் அந்தமான் நிக்கோபார் போன்ற நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள காவல் துறையானது, மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

**5. துணை ராணுவப் படை என்றால் என்ன?**

மத்திய ரிசர்வ் காவல் படை, எல்லை பாதுகாப்புப் படை, அஸ்ஸாம் ரைபிள்ஸ், இந்தோ-திபெத்தியன் எல்லைக் காவல் படை, மற்றும் தேசிய பாதுகாப்புப்படை போன்ற துணை ராணுவ படைகள் மத்திய அரசால் சிறப்பு காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட ஆயுதமேந்திய காவல்படைகளாகும். அவற்றின் கட்டமைப்பானது இராணுவத்துடன் ஒத்திருப்பதால், அவை துணை இராணுப்படை என்று அழைக்கப்படுகிறது. இப்படைகள் காவல் துறையுடன் இணைந்து உள்நாட்டு, கலகங்கள், தீவிரவாதம் மற்றும் கிளர்ச்சி போன்றவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளில் உதவியாக செயல்படுகின்றன.



**6. எவர் விரும்பினாலும் காவல் துறை அதிகாரி ஆக முடியுமா?**

ஆம் எவர் வேண்டுமானாலும் காவல்துறை அதிகாரி ஆக முடியும். ஆனால் குறிப்பிட்ட பதவிகளுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள தகுதிகளை அந்த நபர் கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக ஒருவர் காவலராக விரும்பினால் குறைந்த பட்சம் பள்ளிப்படிப்பும், உதவி-ஆய்வாளராக விரும்பும் பட்சத்தில் பட்டப்படிப்பும் முடித்திருக்க வேண்டும்.

**7. நான் எவ்வாறு காவல்துறை அதிகாரியாக முடியும்?**

மூன்று வழிகளில் நீங்கள் காவல் துறையில் இணைய முடியும். மாநில அளவைப் பொறுத்தவரை, குறைந்தபட்சம் காவலராக இணைந்து பதவி உயர்வு மூலம் ஒரு மாவட்டத்தின் துணை கண்காணிப்பாளர் பதவி வரையோ அல்லது துணை ஆய்வாளராக இணைந்து பதவி உயர்வு மூலம் மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளர் பதவி வரையோ செல்ல முடியும்.

காவலர் மற்றும் துணை ஆய்வாளர் பணியில் இணைய விரும்புவோர் எழுத்துப்பூர்வமான நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். அதில் தேரும் பட்சத்தில் உடல் தகுதித் தேர்வும் அதன் பிறகு நேர்முகத் தேர்வும், பிறகு அந்நபர் உடல் தகுதியை அறிய மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளல் வேண்டும். மேற்கண்ட அனைத்திலும் வெற்றி பெற்றால்தான் ஒருவர் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அதேநேரம்,

ஐ.பி.எஸ் அதிகாரிகள் மத்திய அரசால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவர்களின் பணியானது குறைந்தபட்சம் இணைதுணை கண்காணிப்பாளர் போன்ற பதவிகளில் தொடங்குகிறது.

**8. ஐ.பி.எஸ் (IPS) என்பது என்ன?**

இந்திய காவல்துறை பணி (Indian Police Service) என்பதன் சுருக்கமே ஐ.பி.எஸ் (IPS) எனப்படும். மத்திய அரசின் மூவகை முக்கிய பணிகளில் இது ஒன்றாகும். இந்திய ஆட்சிப்பணி (IAS) மற்றும் இந்திய வனப்பணி (IFS) ஆகியவை மற்ற இரண்டு உயர்நிலைப் பணிகளாகும். இம்முறையில் காவல்துறை அதிகாரிகள் பொது அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடு முழுவதற்கும் உயர்நிலை காவல் அதிகாரிகளாக பணியாற்ற நியமிக்கப்படுகின்றனர்.




**9. எவ்வாறு ஐ.பி.எஸ் பணியில் சேர்வது?**

முதலில் நீங்கள் மத்திய அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் (யூ.பி.எஸ்.சி) நடத்தும் முதல்நிலைத் தேர்வில் பங்குபெற வேண்டும். தேர்வுகள் நடக்குமிடம் மற்றும் நாட்கள் போன்றவை அவ்வப்போது அனைத்து தேசிய மற்றும் வட்டார நாளிதழில் பிரசுரிக்கப்படுகின்றன. முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்ற பின் நீங்கள் இறுதி எழுத்து தேர்வில் பங்கேற்க வேண்டும். அதிலும் தேர்ச்சி பெற்ற பின், நேர்முக தேர்வுக் குழு முன் நீங்கள் நேர்முக தேர்வில் பங்கேற்க வேண்டும். அனைத்திலும் நீங்கள் தேர்ச்சி பெறும் பட்சத்தில், எந்த பணியில், அதாவது ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அல்லது ஐ.எப்.எஸ் இல், இணைய விரும்புகிறீர்கள் என பார்க்கப்படும். இப்பணி நியமனங்களானது தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுவதால், நீங்கள் மிகவும் அதிக மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே தங்களின் விருப்ப பணியைத் தேர்வு செய்ய இயலும்.

**10. ஒரு ஐ.பி.எஸ் அதிகாரிக்கு எவ்வகை பயிற்சிகள் வழங்கப்படும்?**

ஐ.பி.எஸ் பணியை பொறுத்தவரை நீங்கள் முதலில் அடிப்படை பயிற்சிக்காக முசோரியில் உள்ள லால் பகதூர் ஸாஸ்த்திரி நிர்வாக பயிற்சி மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவீர்கள். ஹைதராபாத்தில் உள்ள தேசிய காவல்துறை அகாடமியிலும் அதன் பின்னர் பணி ரீதியிலான பயிற்சிகளும் அளிக்கப்படும்.

**11. மற்ற அதிகாரிகள் மேற்கொள்ளும் பயிற்சிகள் யாவை?**

அவர்களுக்கு உடற்பயிற்சி, ஆயுத பயிற்சி, முதலுதவி பயிற்சி, கலக தடுப்பு பயிற்சி, மற்றும் ஆயுதமில்லா பயிற்சிகள் வழங்கப்படும். மேலும் அவர்களுக்கு குற்றவியல் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள், புலனாய்வு

நுணுக்கங்கள், கூட்ட நெரிசல் கட்டுப்படுத்துதல் மற்றும் பலவகை சந்தர்ப்பங்களை எவ்வாறு சமாளித்தல் போன்றவை பற்றி பாட வகுப்புகள் அளிக்கப்படும்.

**12. நாட்டில் மொத்தம் எத்தனை காவல் நிலையங்கள் உள்ளன?**
ஜனவரி 2014 வரை நாட்டில் 518 பெண்கள் காவல் நிலையங்கள் உட்பட 14,611 காவல் நிலையங்கள் உள்ளன.

**13. நமக்கு தேவையான அளவில் காவல் துறை அதிகாரிகள் உள்ளனரா?**
இல்லை. ஐக்கிய நாடுகள் தரத்தின் படி 1,00,000 குடிமக்களுக்கு குறைந்தபட்சம் 222 காவல் துறையினர் இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவிலோ 1,00,000 குடிமக்களுக்கு 136.4 காவல் துறையினர் மட்டுமே உள்ளனர். இது உலகிலேயே மிக குறைந்த விகிதசாரங்களில் ஒன்றாகும். நிரப்பப்படாத பதவிகள் அதிகம் உள்ளன. மொத்தமுள்ள பதவியிடங்கள் 22.8 லட்சமாக இருந்தாலும். 17.2 லட்சம் பேர் மட்டுமே பணியில் உள்ளனர். அதாவது 24.56% குறைபாடு உள்ளது.

ஆனால் அதுவும் உண்மை நிலவரமல்ல. ஏனெனில், பெருநகரங்களில் பணியில் உள்ள காவல் துறையினர் சிறுநகரங்களை விட அதிகம். அதிலும் அதிகமான காவல் படையினர் ஒரு சிறிய எண்ணிக்கையில் உள்ள முக்கிய நபர்களை காக்கவே பயன்படுத்தப்பயன்படுகின்றனர். மேலும் போக்குவரத்து பணிகள் மற்றும் நிர்வாக பணிகள் காவல் துறையினரின் அதிகபட்ச பணி நேரத்தை ஆக்கிரமிக்கிறது இதன் விளைவாக குற்றத்தடுப்பு, கண்டறிதல், மற்றும் சட்டம் ஒழுங்கிற்காக காவலர் குறைபாடு ஏற்படுகின்றது.

**14. காவல் துறையில் பெண்கள் உள்ளரா?**
ஆம். ஆனால், ஜனவரி 2014 வரை அவர்களின் மொத்த எண்ணிக்கை



6.11% மட்டுமே. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் தான் அதிகமான பெண் காவலர்கள் உள்ளனர்.

**15. பெண் காவலர்களுக்கென தனி கடமைகள் எவையேனும் உண்டா?**

இல்லை. சட்டம் மற்றும் விதிமுறைகள் படி ஆண் காவலர்களின் கடமையே பெண்களும் பின்பற்ற வேண்டும். ஆனால், பெண் காவலர்கள் மட்டுமே பெண்கள் காவல் நிலையத்தில் நியமிக்கப்பட வேண்டும்.

**16. காவல் துறையில் சிறப்பு இடஒதுக்கீடு அல்லது தனியிடங்கள் உள்ளதா?**

உண்டு. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தபட்டவர்களுக்கு இடஒதுக்கீடு உள்ளது. இந்த வகுப்பை சேர்ந்தவர்களை பணியமர்த்த மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்களுக்கென விதிமுறைகள் வகுத்துள்ளது.


DGP

ஜனவரி 2014 வரை தாழ்த்தப்பட்டோர் 10.44%, பழங்குடியினர் 8.26% மற்றும் பிற பிற்படுத்தபட்டவர்கள் 19.26% காவல்துறையில் உள்ளனர். சில மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் மகளிர் மற்றும் சிறுபான்மையினருக்கான ஒதுக்கீடு செய்துள்ளனர்.

**17. காவல்துறையில் தாழ்த்தப்பட்டோர் பெண்கள், இஸ்லாமியர், கிறித்தவர், ஆதி திராவிடர் போன்றவர்கள் தேவையா?**


IGP

காவல்துறையில் அனைத்துவிதமான மதம், வகுப்பு, ஜாதி மற்றும் பழங்குடியினர்கள் கொண்ட ஆண் மற்றும் பெண்கள் தேவை. ஏனெனில், இது பலவிதமான சமுதயங்களின் நடத்தை மற்றும் பழக்கங்களை புரிந்துகொள்ளவும். பாரபட்சங்களை நீக்கவும் உதவும்.

**18. மற்ற அதிகாரிகளுக்கிடையில், ஒரு காவல்துறை அதிகாரியை எவ்வாறு கண்டறிவது?**


DyIGP

அவர்களுக்கென காக்கி நிறம் அல்லது நீல நிற சீருடையும், தொப்பி, பெல்ட் மற்றும் அவர்களின் பதவியைக் காட்டும் வகையில் அவர்களுக்கு தோள்பட்டையில் குறியீடுகளும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் அவர்களின் பெயர் பட்டையையும் மார்பில் அணிந்திருக்க வேண்டும்.

**19. காவல் துறையில் அளிக்கப்படும் பதவிகள் என்னென்ன?**


SSP

காவலர் பதவியே காவல்துறையின் குறைந்தபட்ச பதவியாகும். அதிலிருந்து தலைமை காவலர் (HC), உதவி துணை ஆய்வாளர் (ASI), துணை ஆய்வாளர் (SI), ஆய்வாளர் (IP) உதவித்துணை காவல்துறை கண்காணிப்பாளர் (ASP/DYSP), கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் (Addi.S.P.) காவல்துறை கண்காணிப்பாளர் (SP) முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் (SSP) காவல்துறை துணை தலைவர் (DIG), காவல்துறை தலைவர் (IGP), உதவி காவல்துறை தலைமை இயக்குனர் (ADGP) மற்றும் காவல்துறை தலைமை இயக்குனர் (DGP) பதவிகள் வரை உள்ளன.

**20. பீட் காவலர் (Beat Constable) என்றால் என்ன?**

இல்லை. இவர், தங்களை அடிக்கும் காவலர் அல்ல. எந்த ஒரு காவலரும் கைது செய்தவை தடுப்பவர் அல்லது தப்பிக்க முயல்பவரைத் தவிர வேறு

யார் மீதும் வன்முறையை உபயோகிக்கக்கூடாது.

பீட் காவலர் எனப்படுபவர், ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது வழியில், தனியாகவோ அல்லது மற்றொரு அதிகாரியுடனோ, தொடர்ந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டு, அனைத்தும் சரியாகவும், சந்தேகத்திற்கு இடமின்றியும் இருக்கின்றதா என்பதை சோதனை செய்பவர் ஆவார். அவ்வாறு இரவு நேர ரோந்துப் பணியில் உள்ளபோது, தாங்கள் பணியில்தான் இருக்கின்றோம் என்பதை உணர்த்த உரக்க கத்தியோ அல்லது தடிகளால் (Lathi) அடித்து சத்தம் எழுப்பவோ செய்வர். எனவே அவர்கள் பீட் (Beat Constable) (அடிக்கும் காவலர்) எனப்படுகிறார்.

**21. அனைத்து காவல்துறை அதிகாரிகளும் அனைத்து வகையான கடமைகளையும் செய்யவேண்டுமா?**

இல்லை. காவலர் பதவி முதல் காவல் துறை இயக்குநர் வரை அவரவர்களுக்கென குறிப்பிட்ட பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பணிகளின் பட்டியல் அந்தந்த மாநிலத்தின் காவல்துறை கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு இளைநிலை அதிகாரி ஒரு முதுநிலை அதிகாரியின் கடமைகளை செய்யமுடியாது. உதாரணத்திற்க்கு ஒரு காவல்துறை கண்காணிப்பாளரின் கடமைகளை ஒரு துணை ஆய்வாளர் செய்ய முடியாது. ஆனால் ஒரு கீழ் அதிகாரியின் கடமையை ஒரு உயர் அதிகாரி செய்ய முடியும்.

**22. ஒரு போக்குவரத்து காவல் அதிகாரி ஒரு போக்குவரத்து குற்றமில்லாமல் வேறு ஒரு குற்றத்திற்க்காக ஒருவரை கைது செய்யமுடியுமா?**



செய்யலாம். போக்குவரத்து காவல் அதிகாரி என்பவர் போக்குவரத்து குறித்த கடமைகளை செய்தற்காக நியமிக்கப்பட்ட காவல்துறை அதிகாரியாவார். நீங்கள் குற்ற செயலில் ஈடுபடுவதை பார்க்கும் பட்சத்தில், மற்ற காவல்துறை அதிகாரியைப் போலவே அல்லது ஒரு சாதாரண குடிமகனுக்கிருப்பது போல, உங்களை கைது செய்ய முடியும்.

**23. சீ.ஐ.டி (CID) என்றால் என்ன?**

சீ.ஐ.டி. என்றால் குற்ற புலனாய்வு துறை (Criminal Investigation Department) என்பது பொருள். சில இடங்களில் இது சிறப்பு பிரிவு அல்லது விசாரணைப் பிரிவு என அழைக்கப்படும். ஒரு மாநில காவல்துறையின் விசாரணை பிரிவு. அவர்கள், மோசடி, ஏமாற்றுதல், கோஷ்டி தகராறு மற்றும் மாநிலங்கிடையேயான குற்றங்கள் போன்ற கொடிய குற்றங்களை ஆராய அழைக்கப்படுவர்.

**24. சீ.ஐ.டி (CID) என்பது காவல்துறை அல்லது வேறு ஒன்றா?**

இல்லை. சீ.ஐ.டி. (CID) அதிகாரிகள் காவல் துறையிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர்.

**25. காவல் துறைக்கு பொருப்பாளர் யார்?**

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு காவல்துறை தலைமை அதிகாரி உள்ளார். அவர் காவல்துறை தலைமை இயக்குனர் (DGP) என்று அழைக்கப்படுவார். அவரே தலைமையானவர். ஆனால் அவரும் அரசாங்கத்திர்க்கு பதிலளிக்க வேண்டும். மத்திய அல்லது மாநில அரசின் உள்துறை அசைமச்சரே அவரின் மேலதிகாரி.



**26. டீ.ஜீ.பி. (DGP) ஏன் எந்த ஒரு மந்திரிக்கும் பதிலுரைப்பவராக இருக்க வேண்டும்?**

ஒவ்வொரு அரசாங்கமும் தங்களது குடிமக்கள் தங்களது பாதுகாப்பை உணரவும். தங்களது வாழ்க்கை, குடும்பம் மற்றும் உடைமைகளைப் பற்றி கவலைக்கொள்ளாமலிருக்க வழிவகை செய்வது கடமையாகும். அரசாங்கம் இந்த கடமைகளை காவல் துறைக்குக் கொடுத்துள்ளது. எனவே காவல்துறை அந்த வேலைகளை எவ்வாறு செய்து வருகின்றனர் என்பதை அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அதுபோல காவல்துறையினர் நேர்மையாகவும், நியாகமாகவும் திறம்படவும், தங்களின் விருப்பங்களுக்கேற்றவாரில்லாமல் சட்டப்படி மட்டுமே தங்கள் கடமைகளை செய்து வருகின்றனர் என்பதை மக்களிடம் உறுதிப்படுத்தும் கடமை அரசுக்கு உண்டு.

**27. காவல் துறைக்கு நிதி உதவி யார் கொடுப்பர்?**

காவல் துறையின் சேவைக்கு, மக்கள் வரிப்பணத்திலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது. காவல் துறையின் ஊதியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பட்ஜெட்டிலிரிந்து அளிக்கப்படும். ஆனால் இறுதியில் நோக்கும் போது இவைகள் அனைத்தும் வரி கொடுப்பவரின் சட்டைப்பையில் இருந்துதான் வருகிறது.

**28. காவல்துறை எங்கிருந்து பணம் பெரும்?**

ஒவ்வொரு மாநிலமும் தங்கள் பட்ஜெட்டில் காவல் துறைக்காகவே தனியாக நிதி ஒதுக்கும், காவல் துறை அதிலிருந்து பணம் பெரும்

**29. பட்ஜெட்டை யார் அங்கீகரிப்பது? அவை எதன்பொருட்டு செலவழிக்கப்படும்?**

பட்ஜெட் மாநில சட்ட மன்றத்தால் முடிவெடுக்கப்படும். யூனியன் பிரதேசமாயின் பாராளுமன்றத்தால் முடிவெடுக்கப்படும், முதல் வரைவு நிர்வாகப்பிரிவின் பொது இயக்குனர் (DG) ஆல் தயாரிக்கப்படும். அடுத்து இந்த வரைவு டீ.ஜீ.பி. (DGP) க்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து அது உள்துறைக்கு அனுப்பி வைக்கப்படும். அடுத்து நிதி அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டு பிறகு காவல்துறை பட்ஜெட் அங்கீகரிக்கப்படும். மாநில அரசின் அதிக பகுதி நிதி காவல் துறையின் ஊதியத்திற்காகவே செலவிடப்படுகிறது. மற்ற செலவுகள் பயிற்சி, புலனாய்வு, அடிப்படை கட்டமைப்புகள், வீடு வசதி ஆகியவற்றிற்கு செலவிடப்படுகிறது.

**30. பணம் காவல்துறைக்காக முறையாக செலவிடப்படுகிறதா என்று நாம் எவ்வாறு தெரிந்துகொள்வது?**

காவல்துறைக்காக செலவிடப்படும் பணம் மற்றும் கணக்குகள் பொது கணக்குத் தணிக்கையாளரால் (CAG) வருடாந்திர தணிக்கை செய்யப்படும். இந்த கணக்குகள் பாராளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும்



கொடுக்கப்படும். அந்த அறிக்கைகள் ஆய்விற்குப்பிறகு, உள்துறை மற்றும் காவல்துறை இணையதளத்திலோ அல்லது பாரளுமன்ற நூலகத்திலோ வெளியிடப்படும். நீங்கள் தகவலறியும் உரிமை சட்டத்தின் வாயிலாகவும் காவல்துறை வருடாந்திர செலவுகளை கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். காவல்துறைக்கு, மக்களின் வரிப்பணத்திலிருந்து செலவிடப்படுவதால், பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்று தெரிந்து கொள்வது ஒவ்வொருவரின் உரிமை.

**31. காவல்துறை எந்த சட்டத்தின் அடிப்படையில் செயல்படுகிறது?**
அதிகமான மாநிலங்களில் காவல்துறை சட்டம், 1861 (The Police Act, 1861) என்ற சட்ட அடிப்படையில் செயல்படுகின்றது. சில மாநிலங்கள் தங்களுக்கென்று, ஒரு போலீஸ் சட்டம் அமைத்துக்கொண்டுள்ளது, ஆனால் அனைத்தும் காவல்துறை சட்டம், 1861 அடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சில மாநிலங்கள் சட்டங்களை சீரமைத்து புதிய காவல்துறை சட்டங்கள் அமைத்துக்கொண்டுள்ளன. மற்ற சட்டங்களின் உதாரணத்திற்கு குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் சில மாநில சட்டங்களின் அடிப்படையிலும் காவல் துறை செயல்படுகிறது.

**32. காவல்துறை சட்டம் என்ன சொல்கின்றது?**
காவல்துறை சட்டமானது காவல் துறையினர் என்னென்ன செய்யவேண்டும் என்னென்ன செய்யக்கூடாது, காவல்துறை எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது, என்னென்ன பதவிகள் உள்ளன, யார் நியமனங்கள் செய்வார் மற்றும் காவல்துறையினரின் ஒழுங்கு நடவடிக்கைகளில் என்னென்ன தண்டனைகள் வழங்கப்படும் என்பது பற்றி கூறுகிறது. இந்த சட்டம், பொது மக்களுக்கும் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

**33. காவல்துறை சட்டத்தில் பொதுமக்கள் செய்யும் தவறுகளைப் பற்றியும் ஏன் கூறப்பட்டுள்ளது?**
ஒவ்வொருவரும் சாலைகளையும், பொது இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், பாதுகாப்பாகவும், நோய் நொடிகளிலிருந்து காப்பற்றிக்கொள்வதை உறுதிப்படுத்தும் பொறுட்டே அவை காவல்துறை

**சட்டத்தை நிலைநிறுத்த**



சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. உதாரணத்திற்கு விலங்குகளை சாலையில் நடமாட விடுபவரையும், பலி கொடுப்பவரையும், கொடூரமாக நடத்துபவரையும் காவல் துறையினர் உடனடியாக கைது செய்யலாம். மேலும் பொது வழியை மறிப்பவரையும், மாசுபடுத்துபவரையும், முறையான உரிமம் இல்லாமல் பொது வழியில் கடை போடுபவரையும், அநாகரீகமாக நடந்து கொள்பவரையும், மது அருந்தியவர் அல்லது கலகம் விளைவிப்பவரையும், மிக ஆபத்தான இடங்களான கிணறு மற்றும் முள்வேலி ஆகியவற்றை பாதுகாப்பாக வைக்கமால் விடுபவரையும் கைது செய்யலாம். சமீபத்தில் சில மாநிலங்கள் சட்டங்களை சீரமைத்து புதிய காவல்துறை சட்டங்கள் அமைத்துக்கொண்டுள்ளன. மற்ற சட்டங்களின், உதாரணத்திற்கு குற்றவியல் நடைமுறை சட்டம் இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் சில மாநில சட்டங்களின் அடிப்படையிலும் காவல் துறை செயல்படுகிறது.

**34. சட்டத்தின் ஆட்சி என்றால் என்ன?**

சட்டத்தின் ஆட்சி என்றால் நாம் அனைவரும் அதாவது உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை, பெண் மற்றும் காவல்துறை போன்ற மக்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களும் எவ்வித பாகுபாடும் இன்றி நமது அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து சட்டங்களையும் பின்பற்றி வாழ வேண்டும். எவரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல, மேலும் சட்டத்தின் ஆட்சி என்றால் காவல்துறையின் ஒவ்வொரு நடவடிக்கையும் சட்டத்திற்கு உட்பட்டிருக்க



வேண்டும், அவ்வாறில்லையெனில், காவல்துறையினரும் சட்டத்திற்கு பதில் சொல்ல வேண்டும். எனவே அனைத்து சட்டங்களும் நியாயமாகவும் உண்மையாகவும் அனைவருக்கும் பொருந்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும், என்பதே இதன் பொருளாகும்.

**35. ஒரு காவல்துறை அதிகாரி தான் செய்த குற்றத்திற்காக தண்டிக்கபடுவாரா?**

ஆம். ஒரு காவல்துறை அதிகாரி சட்டத்தை மீருவாறேயானால், அவரும் மற்ற குடிமக்களை போலவே தண்டிக்கப்படுவார். சட்டத்தை காக்க வேண்டிய அவரே சட்டத்தை மீறும்போது, மற்றவர்களைவிட அதிக தண்டனை பெற வேண்டியராவார். அவர் ஒரு குற்றம் புரிந்தால் நீதிமன்றம் மூலம் எந்தவொரு சாதாரண குடிமகனைப்போல தண்டிக்கப்படலாம். ஒருவேளை முரட்டுத்தனமாகவோ அல்லது தவறாகவோ அல்லது தன் கடமையை செய்யாமலிருந்தாலோ அவரது உயரதிகாரி அவரை எச்சரித்தோ அல்லது ஊதிய நிறுத்தம் செய்தோ அல்லது பதவி குறைப்போ அல்லது தற்காலிகமாக பணி இடை நீக்கம் செய்தோ அல்லது இடமாற்றம் செய்தோ தண்டிக்கலாம்.

**36. காவல்துறையினர் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு காப்பீடு உள்ளதா?**

ஆம். காவல் துறையினர் காப்பீடு பெற்றுள்ளனர். அனைத்து காவல் துறையினரும் குழு காப்பீட்டிற்கு தொகை செலுத்த வேண்டும். இது அவர்களின் ஊதியத்திலிருந்து எடுக்கப்படுகிறது. பணியின்போது உயிரிழக்க நேரிடும் காவல் துறையினரின் குடும்பத்திற்கு ஒரு பெரிய தொகை கருணைத்தொகையாக வழங்கப்படும். பணியில் உள்ள ஆபத்துகள் காரணமாக பல காவல்துறையினர் உயிரிழக்க அல்லது தீவிர காயம்பட நேர்கிறது. கடந்த பத்தாண்டுகளில் தோராயமாக ஆண்டிற்கு 1000 காவல் துறையினர் பணியின்போது உயிரிழந்துள்ளனர். பணியின்போது உயிரிழப்பவர்களில் காவலர்கள் (Constables) அதிகம்.

**காவல்துறையின் பணி**
**என்றும் முடிவடைவதில்லை**



**37. நான் ஒரு காவலரை எனது பாதுகாப்பிற்காக நியமித்துகொள்ளலாமா?**

தங்களின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து இருந்தால் நியமித்துக்கொள்ளலாம். சில நேரங்களில் அரசே பாதுகாப்பை ஏற்பாடு செய்யும், சில நேரங்களில் தங்களின் பாதுகாப்பிற்கான செலவை நீங்கள் ஏற்க வேண்டும். 1861 போலீஸ் சட்டத்தின்படி தங்களுக்கு தங்களின் பகுதியில் அதிக காவல் துறையினரின் தேவை ஏற்பட்டால், அதிகாரிகள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், தாங்கள் உரிய தொகையை செலுத்தி, குறிப்பிட்ட காலத்திற்கு கூடுதல் காவல் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம். உதாரணத்திற்கு பெரிய திருமணங்கள் மற்றும் தனியார் நிகழ்ச்சிகளுக்கு, தங்களின் செலவில், காவல்துறை பாதுகாப்பு அளிக்க ஒத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு குற்றம் நடக்க கூடிய இடத்தில் ஒரு பொது நிகழ்வு நடக்குமேயானால், அதிக காவலர்களை நியமிக்க வேண்டியது காவலரின் கடமையாகும், அதுபோன்ற தருணங்களில் செலவுத்தொகை தேவையில்லை.

**38. ஒரு காவல்துறை அதிகாரி எப்பொழுதுமே பணியில் இருப்பாரா?**

ஆம். போலீஸ் சட்டம், 1861 படி ஒரு காவல்துறை அதிகாரி எப்பொழுதுமே பணியிலிருப்பதாகத்தான் பொருள். ஆனால் அதற்கு பொருள் அவருக்கு ஓய்வே அளிக்கப்படமாட்டது என்பது அல்ல. அவர் சீருடையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சட்டத்தை நிலைநாட்டல் வேண்டும். அவர் ஏதேனும் சட்ட மீறலையோ அல்லது உதவிக்காக அழைப்போரை பார்ப்பாரேயானால், தான் பணியில் இல்லை அல்லது சீருடையில் இல்லை என்று கூறி மறுக்க இயலாது.



**39. ஒரு காவல்துறை அதிகாரி தன்னுடைய மேலதிகாரி அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது மந்திரி போன்ற தனக்கு உத்தரவு பிறப்பிக்ககூடிய பதவியில் இருப்பவருடைய அனைத்து வகையான உத்தரவுகளுக்கும், கீழ்படிந்தே ஆக வேண்டுமா?**

இல்லை. ஒரு காவல்துறை அதிகாரி சட்டப்படியான உத்தரவுகளுக்கு மட்டுமே கீழ்படியவேண்டும். உத்தரவு கொடுத்தது உயரதிகாரியே ஆனாலும் அது தவறாயின், அதை செய்த காவலர், அந்த தவற்றிற்கு பொறுப்போற்க வேண்டும். அவர் அந்த தவறான மற்றும் சட்டத்திற்கு எதிரான உத்தரவை கொடுத்தது தன்னுடைய மேல் அதிகாரிதான் என்று கூறி மன்னிப்பு கோரமுடியாது. அது அவரை பாதுகாக்காது.

**40. காவல் துறையினர் பொது போக்குவரத்துகளில் இலவசமாக பயணிக்கவும் சந்தைகளில் பணம்கொடுக்காமல் பொருட்கள் வாங்கவும் முடியுமா?**

சில இடங்களில் காவல்துறை அதிகாரிகளுக்கு தங்களின் பணியின்போது இலவச பயண அட்டை வழங்கப்படும். மற்ற நேரங்களில் இலவசமாக பொது போக்குவரத்துகளில் பயணம் செய்ய கூடாது. மேலும் எந்த ஒரு சந்தையிலும், தான் காவல்துறை அதிகாரி என்பதற்காக பணம் கொடுக்காமல் பொருட்களை வாங்க முடியாது. மற்ற குடிமக்களைப் போல் பணம் கொடுத்தே பொருட்களை வாங்க வேண்டும்.

**41. நான் காவல்துறை அதிகாரியின் அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்படிய வேண்டுமா?**

ஆம். அது சட்டப்படியானதாயின் ஒவ்வொருவருமே காவல்துறைக்கு கடமையை செய்வதில் உதவ வேண்டும். உதாரணத்திற்கு ஒரு

**தனிநபர் பாதுகாப்பு**



காவல்துறை அதிகாரி சண்டையை தடுக்கும்பொழுதும், குற்றம் நடைபெறாமல் தடுக்கும்பொழுதும், அதிகாரிக்கு உதவவேண்டும். மேலும், உங்களுக்கு தெரிந்த குற்றம் தொடர்பான தகவல்களை காவல்துறையினருக்கு தருவது உங்களின் கடமையாகும். மேலும் குற்றவாளிகளுக்கு அடைக்கலமோ, மறைவிடமோ வழங்காமலிருப்பதும் தங்கள் கடமையாகும். வழக்குகள் தொடர்பான எதையேனும் நீங்கள் பார்க்க நேரிடும் பட்சத்தில், அது குறித்து நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதும் தங்கள் கடமையாகும்.

**42. ஒரு காவலர் என்னை எங்கேயேனும் அழைப்பாராயின், நான் உடனடியாக அவருடன் செல்ல வேண்டுமா?**

இல்லை. எனினும் ஒரு காவல்துறை அதிகாரி, தன் பணி தொடர்பாக எதற்கேனும் சாட்சியமாக இருக்க தங்களை அழைப்பாராயின், உதாரணத்திற்கு கைது நடவடிக்கை, பொருட்களை கைப்பற்றுதல், குற்ற நிகழ்விட சோதனை போன்றவற்றிற்கு சாட்சியாக தங்களை அழைப்பாராயின், நீங்கள் கண்டிப்பாக அவருடன் செல்ல வேண்டும். இது தான் பொதுவாக ஒருதலை பட்சமற்ற சாட்சியாக (Pancha Witness) கருதப்படுகிறது.

**43. ஒரு காவல்துறை அதிகாரி, என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தால் நான் கட்டாயமாக செல்ல வேண்டுமா?**

இல்லை. காவலருடன் ஒத்துழைப்பது ஒரு நன்மை பயக்கும் விஷயமாயினும் தங்களை கைது செய்யவில்லையெனில், அவருடன் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஒருவேளை தங்களிடம் ஒரு குற்றத்தை பற்றி விசாரிக்க வேண்டுமாயின், தங்களுக்கு எழுத்து மூலமாக



முறையான சம்மன் அனுப்ப வேண்டும். இவ்வாறு நடக்கும் வரை அவருடன் செல்வது கட்டாயமில்லை, பெண் அல்லது 15 வயதுக்கு உட்பட்ட குழந்தையாயின் அவர்களை வீட்டில் தான் விசாரிக்க வேண்டும்.

**44. ஒரு காவல்துறை அதிகாரி கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் நான் பதில்அளிக்க வேண்டுமா?**

ஆம். எப்பொழுதுமே காவல்துறை அதிகாரி கேட்கும் கேள்விகளுக்கு தங்களுக்கு விவரம் தெரிந்திருந்தால் நேரடியாக நேர்மையாக பதில் சொல்லி தெரியபடுத்துவது நல்லது. தங்களுக்கு தெரியாவிட்டால் தங்களை அவர்கள் கூறுவது போல் கூறச்சொல்லி வற்புறுத்துவதற்கோ அல்லது தங்கள் வாயிலேயே வார்த்தைகளை வரவைப்பதற்கோ அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. காவல்துறை அதிகாரியின் கேள்விகளின் பொழுது யாரையேனும் அருகில் வைத்துக் கொள்வது எப்பொழுதுமே நல்லது.




**45. நான் ஆபத்திலிருக்கும் பொழுது காப்பாற்ற வேண்டியது காவல்துறை அதிகாரியின் கடமையா?**

ஆம். 1985-இல் காவல்துறையினரின் நடத்தை விதிகள் வழி காட்டுதல்கள் உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டு அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைமை செயலகம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன்படி காவல்துறை அதிகாரிகள் ஒருவரின் வசதி மற்றும் அந்தஸ்த்தை பார்க்காமல் அனைவருக்கும் உதவிடல் வேண்டும். இவ்விதிகளின்படி காவல்துறை அதிகாரிகள் அச்சமின்றி, நடுநிலைமையுடன் கருணையுள்ளத்தோடு, மக்களின் நலத்தை மனதில் கொண்டு அனைவருக்கும் உதவிட வேண்டும். மேலும் எப்போதும் தயாராகவும் நட்புடமையுடனும் இருத்தல் வேண்டும்.

**46. நான் என்னுடைய குடும்ப பிரச்சனைகளுக்காக காவல்துறையின் உதவியை நாடலாமா?**

அது பிரச்சனையை பொருத்தது. அது ஒரு குடும்ப வன் முறையாகவோ அல்லது பெண்களை அல்லது குழந்தைகளை கடுமையான தாக்குவதாகவோ அல்லது கூடா உறவாக அல்லது மற்ற குற்றமாகவோ இருந்தால் கண்டிப்பாக காவல் துறையினர் உதவி செய்தே தீரவேண்டும். இதை ஒரு தனிப்பட்ட விஷயம் என்று சொல்லி, மறுக்க இயலாது. ஆனால் உரிமை வயது எய்திய பிள்ளைகள் கீழ்படியாமலோ, வீட்டை விட்டு ஓடிப்போய் மணம் முடித்திருந்தாலோ, அவர்களை விரட்டி பிடித்து வீட்டாருடன் சேர்ப்பது காவல்துறையின் கடமையல்ல. அது முழுக்க முழுக்க ஒரு தனிப்பட்ட குடும்ப விவகாரம்.

**47. ஒரு வேளை காவல்துறை அதிகாரி உதவி செய்யமறுத்தாலோ அல்லது காவல் துறையினரே அங்கு இல்லையெனில், ஒரு திருடனையோ அல்லது தவறு செய்தவரையோ, பொதுமக்கள் பிடித்து அங்கேயே தண்டிக்க இயலுமா?**

ஆம் மற்றும் இல்லை. தாங்கள் ஒரு குடிமகனாக ஒரு குற்றவாளியை கைது செய்து மேலும் அருகிலுள்ள காவல்நிலையத்துக்கு அழைத்து

செல்ல வேண்டும். ஆனால் ஒரு தவறு செய்பவரை அடிக்கவோ அல்லது அடிக்கும் கூட்டத்தில் சேர்ந்துகொள்ளவோ கூடாது. மக்கள் தங்களை தாங்களே காப்பாற்றிக்கொள்ள மட்டுமே உரிமை உள்ளது. அதுவும் நியாயமாக மட்டுமே பயன்படுத்த முடியுமே தவிர அந்நபரை கொடூரமாக கடுமையாக தாக்க முடியாது. ஒரு காவல்துறை அதிகாரி அது போன்ற சம்பவத்தில் இணைந்தாலோ அல்லது அதற்கு அனுமதி அளித்தாலோ, அவர் காவல்துறையின் அல்லது குற்றவியல் விசாரணைக்கு உள்ளாக நேரிடும்.

**48. ஒருவேளை ஒரு காவல்துறை அதிகாரி எனக்கு உதவி செய்யவில்லையென்றால் என்ன செய்ய வேண்டும்?**

ஒருவேளை ஒரு காவல்துறை அதிகாரி வேண்டுமென்றே கடமையை செய்வதை புறக்கணித்தாலோ அல்லது கவனக்குறைவாக இருந்தாலோ, அவர் சிறை தண்டனைக்கு உள்ளாவார். ஒரு வேளை உதவி செய்யாததாலோ, அதனால் தங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தாலோ, நீங்கள் மேலதிகாரிகளிடம் முறையிடலாம். இது போன்ற தருணங்களில் அவர் கடமை தவறியதற்காக நடவடிக்கைக்குள்ளாவார்.




**49. காவல்துறையினர் தாங்கள் விரும்பியதையெல்லாம் செய்யமுடியுமா?**

இல்லை. சட்டப்படியானவற்றை மட்டுமே செய்யமுடியும். இன்னும் கூறவேண்டுமெனில், அவர்கள் மிக கடுமையான விதிகளுக்கு உட்பட்டவர்கள். அவ்விதிகளானது தங்களின் துறைசார் விதிகள், குற்றவியல் சட்ட விதிகள், உச்சநீதிமன்ற உத்தரவுகள் மற்றும் மனித உரிமை ஆணையத்தின் விதிமுறை ஆகியவைகளாகும்.

**50. காவல் துறையினர் அவ்விதிகளை மதிக்கவில்லையெனில்?**

விஷயத்தைப்பொறுத்து உயரதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவரிடமோ புகார் செய்யவேண்டும். எழுத்து மூலமாக புகார் செய்து ரசீது பெறுவது எப்பொழுதுமே நல்லது.

**51. என்னவென்று நான் புகார் செய்யலாம்?**

நீங்கள் காவல்துறை அதிகாரி செய்யும் எந்தவொரு தவறுக்கும் புகார் செய்யலாம். ஏனெனில், அவர் ஒரு மக்கள் சேவகர் மற்றும் அவர் தனது கடமையை எப்பொழுதும் செய்யக் கடமைப்பட்டவர். தனது கடமையிலிருந்து தவறலோ அல்லது காலதாமதம் செய்வதோ கூடாது.

**52. காவல்துறையினர் முரட்டுத்தனமாகவோ அல்லது அவமதிக்கதக்கவாறோ நடந்துகொண்டால்?**

மீண்டும் நீங்கள் அவரது கடமை தவறுதல் அல்லது ஒழுக்க குறைபாடு பற்றி அவரது உயர் அதிகாரிக்கு புகார் செய்யலாம். அது ஒரு தீவிர குற்றமாயின், காவல்நிலையத்தில் அவருக்கெதிராக புகார் அளிக்கலாம் அல்லது உள்ளூர் நீதித்துறை நடுவரிடம் நேரடியாக புகார் அளிக்கலாம்.

**53. அவர்களின் அதிகாரிக்கு எதிராக நான் கொடுத்த புகாரை, தங்களின் அதிகாரிக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமே என்ற காரணத்தால் ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்?**

ஆம். இது அடிக்கடி நடக்கக்கூடிய ஒன்று தான். ஆனால் இது முடிவல்ல.

நீங்கள் அவர்களின் கடுமையான நடத்தை பற்றியும், கடமை தவறுதல் பற்றியும். அதிகார துஷ்பிரயோகம் பற்றியும் காவல்துறையின் தலைவருக்கு ஒரு புகார் செய்யலாம். அதுவே ஒரு கடுமையான குற்றமாயின் நீதித்துறை நடுவரிடம் நேரடியாக புகார் அளிக்கலாம்.

**54. ஒரு விஷயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்து செல்வது கடினமா? அதற்கு அதிககாலம் பிடிக்குமா?**

காவல்துறையினருக்கு எதிராக தொடரும் புகார் முறையை எளிதாக்கவே சில மாநிலங்களில் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த சிறப்பு அமைப்பு காவல் துறையினரக்கு எதிராக பொதுமக்களால் தொடரப்படும் புகார்களை மட்டுமே கவனத்தில் கொள்ளும். மேலும், யாரேனும் காவல் துறைக்கெதிராக புகார் செய்ய வேண்டுமாயின், அந்த புகார்களை தேசிய அளவிலும் மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ள பல ஆணையங்களில் தொடரலாம். தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் மாநில மனித உரிமை ஆணையம், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம் மற்றும் இது போன்ற மாநில ஆணையம் மற்றும் குழந்தைகள் ஆணையம், ஊழல் சம்மந்தப்பட்ட புகார்களுக்கு மத்திய புலானய்வு துறை, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், லோக் ஆயுக்தா மற்றும் மாநில ஊழல் கண்காணிப்பு துறை போன்றவைகள் உள்ளன. இந்த ஆணையங்கள் உங்களின் புகாரை பரிசீலித்து அதிகாரத்தைக்கொண்டு காவல்துறையினருக்கெதிராக முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய உத்திரவிடும் அல்லது பாதிக்கபட்டவருக்கு நஷ்டயீடு அளிக்க உத்தரவிடும்.

**55. நான் ஒரு குற்றம் பற்றி காவல்துறைக்கு கூறவேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்?**

திருட்டு, கன்னம் வைத்தல், பெண்களை ஏளனம் செய்தல், தாக்குதல், பாலியல் இடையூறு செய்தல், கற்பழிப்பு, கடத்தல் மற்றும் கலகம் போன்ற கொடும் குற்றமாயின், உடனடியாக உங்கள் வட்டார காவல் நிலையத்தை அணுகி, முதல்தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அவர்கள் புகாரை எழுத்து மூலமாக பதிவு செய்து தங்களுக்கு ஒரு நகலை வழங்க வேண்டும். மேலும் நீங்கள் நேரடியாகவும் புகாரை நீதித்துறை நடுவரிடம் கொடுத்தால், அந்த புகாரை அவர் பதிவு செய்துவிடுவார்.

**56. எஃப் ஐ ஆர் (FIR) என்றால் என்ன?**

முதல் தகவல் அறிக்கை (First Informtion Report) என்பதன் சுருக்கமே எ.ஃ.ப்.ஐ.ஆர் (FIR) ஆகும். ஒரு புலன்கொள்ளகூடிய குற்றம் (Cognizable Offence) சம்மந்தமாக பாதிக்கபட்டவரோ, நேரில் கண்டவரோ அல்லது எவர் ஒருவரேனும் FIR தாக்கல் செய்யலாம். நீங்கள் FIR –ல் சொன்ன சங்கதிகளை வைத்து காவல்துறை விசாரணை நடத்தி தகுந்த வழக்கா என ஆராயும்.






**57. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய உள்ளூர் காவல் நிலையத்திற்கே செல்ல வேண்டுமா அல்லது எந்த காவல் நிலையத்தில் வேண்டுமானாலும் பதிவு செய்யலமா?**

நீங்கள் எந்த காவல் நிலையத்தில் வேண்டுமானலும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யலாம். ஆனால் குற்றம் நடந்த இடத்தின் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் கொடுப்பது நல்லது. ஏனெனில், அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். நீங்கள் வேறு காவல் நிலையத்திலாவது புகார் செய்தால், அவர்கள் பதிவேட்டில் பதிவு செய்தபின் அதனை உரிய காவல்நிலையத்திற்கு அனுப்பி வைப்பர். உரிய காவல்நிலையம் அல்ல என்பதால் அவர்கள் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுக்க முடியாது.

**58. காவல் துறையினர் எனது புகாரை பதிவு செய்ய மறுக்கலாமா?**

ஆம் மற்றும் இல்லை. இந்தியாவில் குற்றங்கள் 'புலன்கொள்ளகூடிய' குற்றங்கள் (Cognisable Offences) மற்றும் 'புலன்கொள்ளமுடியாத'| (Non – Cognisable Offences) என இரு வகைப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு புலன்கொள்ளகூடிய குற்றங்கள் என்றால் கொலை, கற்பழிப்பு, கலகம், மற்றும் ஆயுதமேந்திய கொள்ளை ஆகியவை ஆகும். இந்த குற்றங்களில், காவல் துறையினர் நேரடியாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை தொடக்கலாம். ஏமாற்றுதல், மோசடி, போலி ஆவணம் தயாரித்தல், இரட்டை திருமணம், மற்றும் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்றவை "புலன்கொள்ளமுடியாத குற்றங்கள்" ஆகும். இதுபோன்ற வழக்குகளில் நீதித்துறை நடுவர் வழக்கை கோப்பிற்கு எடுத்த பிறகே, காவல்துறை விசாரணையை தொடங்க உத்திரவிடப்படும். இந்த கடுமையான பாகுபாட்டை எளிமையாக புரிந்து கொள்ள இவ்வாறு எடுத்துக்கொள்ளலாம். அதாவது மிக அவசர நடவடிக்கை எடுக்க வேண்டிய வழக்குகளில் நேரடியாக காவல்துறை விசாரணை செய்யலாம். மற்ற வழக்குகளில், நீதித்துறை நடுவர் உத்திரவின் பேரிலேயே காவல்துறை விசாரணை செய்ய இயலும், எனவே ஒருவேளை காவல்துறை கோப்பிற்கு எடுக்கவில்லையெனிலும், தங்களின் புகாரை கேட்டு, பதிவேட்டில் பதிவு செய்து, கையெழுத்திட்டு அதன் நகலை தங்களுக்கு இலவசமாக வழங்கி அதன் பொருட்டு நீதித்துறை நடுவரை நாட வழிகாட்ட வேண்டும்.

**59. ஒருவேளை என்னுடைய புகார் புலன் கொள்ள கூடிய குற்றமாயினும் காவல்துறையினர் வழக்கை பதிவு செய்யவில்லையென்றால், நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் புகாரை நேரடியாக உயர் அதிகாரிகளான மாவட்ட காவல் தலைவருக்கே அளிக்கலாம் அல்லது அருகிலுள்ள நீதித்துறை நடுவருக்கே அளிக்கலாம். அவர்கள் அதனை பதிவு செய்ய உத்திரவிடுவர். தங்கள் புகார் சரியாக சென்றடைந்ததை உறுதிப்படுத்திக் கொள்ள அதை நேரடியாக கொடுக்கவும் அல்லது பதிவு தபால், உடன் ஒப்புகை அட்டை இணைத்து அனுப்பவும். சரியான இடத்திற்கு பத்திரமாக சேர்ந்ததற்கான ஆதார ரசீதை பாதுகாப்பாக வைக்கவும். அதுவே புகார் உரிய அதிகாரிக்கு சேர்ந்து விட்டது என்பதைக் குறிக்கும். அதுவே தங்களின் புகாருக்கு சரியான நடவடிக்கை எடுப்பதற்கு போதுமானது. ஆனால் தங்கள் புகார் பதிவு செய்ததற்கு ஏற்பட்ட

கஷ்டங்களை முதலில் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போதுதான் அதே தவறு மீண்டும் நடக்காமல் தவிர்ப்பார்.

**60. என்னென்ன விஷயங்கள் எஃஐஆர் (FIR) இல் தெரிவிக்க வேண்டும்?**

எ.ஃஐஆர் (FIR) என்பது நடந்த சம்பவம் பற்றிய தங்களின் பதிப்பு அல்லது தங்களுக்கு சொல்லப்பட்ட விஷயமாகும். சம்பவத்தை பற்றி தெரிந்திருப்பது எப்பொழுதுமே நல்லது, ஆனால் சம்பவத்தை நேரில் பார்த்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எதுவாயினும் சரியான தகவல் கொடுக்க வேண்டும். சம்பவத்தை மிகைப்படுத்துவதோ அனுமானங்கள் அல்லது உட்புகுத்தல்கள் செய்யக்கூடாது. சம்பவ இடம், நேரம் மற்றும் தேதி போன்றவை குறிப்பிட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு நபரின் பங்கை பற்றியும் கவனமாக தெரிவித்திருக்கவேண்டும். எங்கிருந்தார்கள், என்ன செய்து கொண்டிருந்தார்கள். யார் யார் என்னென்ன செய்தார்கள், யாருக்கு என்ன காயம் ஏற்பட்டது, என்ன பொருள் சேதம் எற்பட்டது போன்றவைகள் குறிப்பிடப்பட வேண்டும். என்னென்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை தவறாமல் குறிப்பிட வேண்டும். கூடுமான வரை எவ்வளவு துரிதமாக தகவல்களை பதிவு செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்தல் வேண்டும். ஒருவேளை புகாரை பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டால் தாமதத்திற்கான காரணத்தையும் குறிப்பிட வேண்டும்.

**61. நான் கொடுத்த புகாரை காவல்துறையினர் சரிவர எழுதியுள்ளார்களா என எவ்வாறு தெரிந்துகொள்வது?**

எ.ஃ.ஐ.ஆர். (FIR) என்பது தங்களுக்கு தெரிந்த விவரங்களின் பதிப்பு என்பதை எப்பொழுதுமே, நினைவில் கொள்ளவும். காவல்துறையினர் நீங்கள் கொடுத்த புகாரை கூடுதல் குறைவு இல்லாமல் அப்படியே பதிவு செய்ய வேண்டும். இதை உறுதி செய்யவே புகாரின் கூறுகளை புகார்தாரருக்கு படித்து காண்பித்து உறுதி செய்த பிறகே கையெழுத்து பெற வேண்டும் என சட்டம் கூறுகிறது. மேலும் காவல்துறையினர் புகாரின் உண்மை நகலை இலவசமாக அளிக்க வேண்டும். அது எ.ஃ.ஐ.ஆர் பதிவேட்டில் பதித்த பிறகே அதன் நகல் உயர் அதிகாரிகளுக்கும் நீதித்துறை நடுவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

**62. பெண்களின் எப்.ஃஐ.ஆர் (FIR) சிறப்பு முறையில் பதிவு செய்யப்பட வேண்டுமா?**

ஆம், பெண்களுக்கெதிரான குற்றமாயின், பெண்கள் காவல்துறையை அணுகி புகார் செய்வது கடினம் என்பதை கருத்தில் கொண்டு, பெண்களுக்கு எதிரான கற்பழிப்பு, கூட்டுக் கற்பழிப்பு, பின்தொடர்தல், ஒளிந்து பார்த்தல், பாலியல் துன்புறுத்தல், மானபங்கப்படுதுதல், திராவகம் எறிதல் போன்ற குற்றங்களின் புகார்களை பெண் காவலர் மட்டுமே பதிவு செய்ய முடியும். ஒருவேளை பாதிக்கப்பட்டவர் மனதளவிலோ அல்லது உடலளவிலோ பாதிக்கப்பட்டிருப்பின், அவர் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டிய அவசியம்கூட இல்லை. காவல் துறையினர் பாதிக்கபட்டவரின் வீட்டிற்கோ அல்லது அவர் விரும்புமிடத்திற்கோ சென்று புகாரை பதிவு செய்ய வேண்டும். அந்த பாதிக்கப்பட்டப் பெண்ணின் விருப்பத்திற்கேற்ப பெண் ஆலோசகருக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும், அது தொடர்பான வாக்குமூலங்களை வீடியோ படம் எடுக்க வேண்டும்.






**63. அது போன்ற புகார்களை காவல் துறையினர் பதிவு செய்யவில்லையென்றால்?**

ஒருவேளை ஒரு காவல்துறை அதிகாரி ஒரு பெண்ணின் பாலியல் குற்றபுகாரை ஏற்கவில்லையென்றால், அது அந்த அதிகாரிக்கெதிராக நிரூபிக்கப்பட்டுவிட்டால் அவருக்கு ஆறு மாத சிறை தண்டனையிலிருந்து இரண்டு வருட சிறை தண்டனை வரையிலும் அபராதமும் விதிக்கப்படும்.

**64. பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகும் குழந்தைகளின் நிலைமை என்ன? அது போன்ற புகார்களில் காவல் துறையினர் ஏதேனும் தனி நடைமுறையை பின்பற்ற வேண்டுமா?**

ஆம். கண்டிப்பாக குழந்தைகளுக்கெதிரான புகார்களில், ஏற்ற வகையில், புகார் தொடுக்கவும், ஆதாரங்களை திரட்டவும், விசாரணை நடத்தவும், வழக்கை நடத்தவும் குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து காக்கும் சட்டம் 2012 இல் நடைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளது. புகார் கொடுத்த உடனேயே குழந்தைகள் நல காவலர் அல்லது அருகிலுள்ள காவல் நிலைய காவலர் அந்த குழந்தையின் புகாரை அவர் வீட்டில் அல்லது அவர் விரும்புமிடத்தில் வைத்து பதிய வேண்டும். அந்த புகாரும் துணை ஆய்வாளர் பதவிக்கு குறையாமல் இருக்கும் ஒரு பெண் முடிந்தவரையில் காவல்துறை அதிகாரியால் பதிவு செய்யப்படவேண்டும். அந்த காவல் அதிகாரி கண்டிப்பாக சீருடையில் இருக்க கூடாது. எந்த ஒரு காரணத்தாலும் ஒரு குழந்தையை இரவு முழுக்க காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கக் கூடாது. அந்த குழந்தையின் புகாரை அந்த குழந்தைக்குப் புரியும் மொழியிலேயே பதிவு செய்ய வேண்டும். தேவைப்பட்டால் ஒரு மொழிப்பெயாப்பாளரின் அல்லது குழந்தை நல வல்லுநரின் உதவியை நாடலாம். ஒரு வேளை குழந்தைக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது என இளவர் நல காவலர் அல்லது அருகிலுள்ள காவல் துறையினருக்கு தோன்றினால் ஒரு காப்பகத்திற்கோ அல்லது மருத்துவமனைக்கோ செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் முன் அதற்கான காரணத்தை எழுத்து மூலமாக பதிவு செய்ய வேண்டும்.

ஒருவேளை குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் அவர் மருத்துவ ஆய்வை அவர் பெற்றோர் அல்லது அந்த குழந்தைக்கு நன்கு அறிந்தவர் முன்னிலையில் தான் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டது ஒரு பெண் குழந்தையெனில், அவர் மருத்துவ ஆய்வு ஒரு பெண் மருத்துவரால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

**65. எப்ஃஐஆர் தாக்கல் செய்த பிறகு என்ன நடக்கும்?**

காவல்துறை விசாரணையை தொடங்கும். அதன் ஒரு பகுதியாக காவல் துறையினர் பாதிக்கப்பட்டவருடன் பேசி அவர்கள் சொல்வதை பதிவு செய்தல், மரண வாக்குமூலத்தை பதிவு செய்தல், சம்பவ இடத்தை பார்த்து, கைப்பற்றிய பொருட்களை தடவியல் துறைக்கு அனுப்பி சடலங்களை உடல்கூராய்வுக்கு அனுப்பி, மக்களை கேட்டறிந்து விசாரணை செய்வர். விசாரணை முழுவதும் முடிந்த பிறகு, அதனை ஒரு அறிக்கையாக பதிவு செய்ய வேண்டும். அதுவே சலான் அல்லது குற்றப் பத்திரிக்கை (Charge Sheet) என்று அழைக்கப்படும்.

**66. சலான் அல்லது குற்றப்பத்திரிக்கை (Charge Sheet) என்றால் என்ன?**

விசாரணை முடிந்தவுடன் காவல்துறை அதிகாரி வழக்கின் பொருமைகளை பார்த்து, குற்றம் நடந்ததற்கான ஆதாரங்கள் உள்ளனவா என கண்டறிந்து அவைகள் யாவையும் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடுவார். ஒருவேளை குற்றம் நடந்ததற்கான கூறுகள் சரியாக இல்லையெனில், குற்றம் சுமத்தப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கு அழைப்பது தேவையற்ற கால விரயம் ஆகும். ஒரு முறை குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தையும், அரசு தரப்பையும் சென்றடைந்த பிறகு, அதன் மீது சுதந்திரமான விசாரணை நடைபெறும்.

**67. காவல்துறை என்னுடைய வழக்கை முடித்து மேல் நடவடிக்கை எடுக்காமல் நிறுத்திவிட முடியுமா?**

ஆம். விசாரணை முடித்தபிறகு அதில் குற்றம் நடந்ததற்கான கூறுகள் ஏதுமில்லையென்றாலோ அல்லது போதுமான ஆதாரங்கள் இல்லையென்றாலோ அல்லது குற்றம் நடந்துள்ளது ஆனால் குற்றம்




புரிந்தவர்களை அடையாளம் காண முடியவில்லையென்றாலோ, அவர்கள் வழக்கை முடித்துக் கொள்ள முடியும். அந்த மாதிரியான சமயங்களில் அது உங்களுக்கு தெரிவிக்கபட வேண்டும். நீங்கள் அதனை எதிர்த்து நீதி மன்றத்தில் முறையிட முடியும்.

**68. வழக்கின் நிலைமை அல்லது முன்னேற்றம் குறித்து எனக்கு தகவல் கொடுக்கப்படுமா?**

சட்டத்தில், வழக்கின் நிலைமை அல்லது முன்னேற்றம் குறித்து உங்களுக்கு தகவல் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டு எதுவும்

சொல்லப்படவில்லை. ஆனால் விசாரணைக்கு எந்தவொரு பாதிப்பும் வராமல் வழக்கின் நிலைமை அல்லது முன்னேற்றம் குறித்து புகார்தாரருக்கு கூறுவது நல்லது.

**69. ஒருவேளை காவல்துறையினர் விசாரணை செய்யாமலோ அல்லது மிக தாமதமாக செய்தலோ அல்லது சில வெளிப்படையான கோணங்களை ஆய்வு செய்ய மறுத்தாலோ என்ன செய்வது?**

ஒரு முக்கியமான சட்டக்கொள்கை யாதெனில் யாரொருவரும் விசாரணையில் தலையிடக்கூடாது. ஒருவேளை வழக்கினை முன்னடத்திச்செல்ல மறுத்தாலோ அல்லது மிகத்தாமதமாக வழிநடத்தினாலோ அல்லது விசாரணையின் கூறுகளை சரி வர கடைபிடிக்காமலிருந்தாலோ, அவரது மேலதிகாரிக்கோ அல்லது அருகிலுள்ள நீதித்துறை நடுவருக்கோ முறையிடலாம். அவர்கள் அதனை பரிசீலித்து முடிவெடுப்பார்கள். நீங்கள் மேற்கண்ட அனைத்தையும் எழுத்து மூலம் பதிவு செய்து ஒரு நகலை தங்களிடம் வைத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

**70. ஒரு காவல்துறை அதிகாரியை நான் எப்பொழுது வேண்டுமானாலும் அழைக்கலாமா?**

ஆம் மற்றும் இல்லை. காவல்துறையினரின் எண்ணிக்கை மிகக்குறைவு. ஆனால் அவர்களின் பணிச்சுமையோ அதிகம். எனவே பொதுமக்கள் வீண் புகார்களை அளிப்பதற்காக அழைக்ககூடாது. ஆனால் தாங்கள் ஏதும் ஆபத்திலிருந்தாலோ அல்லது ஒரு குற்றம் நடக்கிறது அல்லது நடக்கப்போகிறது அல்லது ஒரு கலகம் நடக்கப்போகிறது அல்லது சில நபர்கள் சண்டையிட்டுக்கொள்கிறார்கள் அல்லது முறைகேடு



நடக்கப்போகிறது அல்லது தங்களுக்கு ஏதாவது முக்கிய தகவல் தெரிந்தருக்கிறது என்றால், நீங்கள் காவல் துறையை தொடர்பு கொள்ளலாம்.

**71. ஒரு காவல்துறை அதிகாரி எனது அனுமதியின்றி என் வீட்டிக்குள் நுழைந்து, தேடல் மேற்கொண்டு பொருட்களை எடுத்துச் செல்லலாமா?**

சில சந்தர்ப்பங்களில் மட்டும் முடியும். கேள்விகள் கேட்பதற்காக தங்களின் வீட்டுக்கு தங்களின் அனுமதியுடன் தான் வர வேண்டும். ஒரு வேளை தாங்கள் ஒரு குற்றவாளியை மறைத்து வைத்திருப்பதாகவோ அல்லது திருட்டு பொருளை மறைத்து வைத்திருப்பதாகவோ அல்லது ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகவோ சந்தேகம் எழுந்தால். நீதித்துறை நடுவரின் தேடல் வாரண்ட் கண்டிப்பாக வேண்டும்.

ஆனால் ஒருவேளை தாமதித்தால் மறைத்து வைத்திருக்கும் தேடப்படுபவர் அல்லது குற்றவாளி அல்லது தேடி வந்த திருட்டுப்பொருள் காணாமல் போய்விடும் என்ற அச்சம் ஏற்பட்டால் தேடல் வாரன்டின்றி காவல் துறையினர் உள்ளே வரலாம்.

**72. அதாவது தாங்கள் கூறுவது யாதெனில் அவர்கள் வீட்டுக்குள் புகுந்து எதை வேண்டுமானலும் எடுத்துச்செல்லலாமா?**




இல்லை. ஏதேனும் அவசர தேவையிறுந்தாலே தவிர அதாவது தேடப்படுபவர் அல்லது குற்றவாளி தப்பித்துவிட வாய்ப்பிருந்தாலோ அல்லது தடயங்கள் அழிக்கப்படும் வாய்ப்பிருந்தாலோ வாரன்டின்றி காவல் துறையினர் தங்கள் வீட்டுக்கு உள்ளே வரலாம். வாரன்டுடன் அல்லது வாரன்டின்றி செயல்படுவதற்க்கு நிறைய வழிமுறைகள் கடைபிடிக்கப்படவேண்டும். காவல் துறையினர் குறைந்தபட்சம் இரு உள்ளூர் தனிப்பட்ட சாட்சிகளை அழைத்துச்செல்ல வேண்டும், தேடல், வீட்டு உரிமையாளரின் முன்னிலையில்தான் நடைபெறவேண்டும். அவரை வெளியேற சொல்லக்கூடாது, காவல் துறையினர் தாங்கள் கைப்பற்றிய பொருட்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். காவல் துறையினர் எதனைக் கைப்பற்றினர் என்ற பட்டியலை காவலர், உரிமையாளர் மற்றும் சாட்சிகள் சரிபார்த்து கையெழுத்திட வேண்டும். அதன் ஒரு நகலை உரிமையாருக்கு கொடுக்கவேண்டும். வீட்டில் ஒருவேளை பர்தா பெண்கள் இருந்தால், ஒரு பெண் அதிகாரி உடன் வந்து தேடல் ஒழுக்கமான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

**73. தேடல் வாரண்ட் (Search Warrant) என்றால் என்ன?**

பொதுமக்களின் வீடு, அலுவலகம் ஆகியவைகள் ஒரு தனிப்பட்ட இடம். எனவே ஒரு சரியான காரணம் இல்லாமல் அவற்றுள் நுழைந்து தேடல் செய்ய முடியாது, சட்டம் கூறுவதாவது ஒருவரின் உரிமையிலுள்ள இடத்தினுள் நுழைய சரியான காரணம் இருக்க வேண்டும். எனவே எல்லாவற்றிற்கும் முன்பாக, காவல்துறையினர் நீதித்துறை நடுவர் முன்பு சென்று பொருட்கள் அல்லது ஆவணங்கள் அல்லது நபர்களை மறைத்துவைத்திருப்பதாக நம்பும் அளவிற்கு காரணங்கள் உள்ளன என்று விளக்கி, அவை எவ்வாறு குற்றத்தைத் தடுக்க உதவும் என்பதையும் விளக்கி கூறவேண்டும். ஒருவேளை நீதித்துறை நடுவர் காவல் துறையினர் மேற்க்கொள்ளப்போவது மர்மமான தேடல் அல்ல என்று நம்பினால், அவர் அந்த அதிகாரத்தை கொடுப்பார். அந்த அதிகாரம்

மிக அளவானது, அது யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறதோ அந்த அதிகாரியின் பெயர், பதவி, தேடல் மேற்க்கொள்ளப்போகும் இடத்தின் விவரங்கள் மற்றும் நீதிமன்றத்தின் முத்திரை ஆகியவை இருக்க வேண்டும்.

**74. நான் சாலையில் நடந்து செல்லும் பொழுது ஒரு காவல்துறை அதிகாரி என்னை நிறுத்தி தான் நினைக்கும் எதை வேண்டுமானாலும் கேட்கலாமா?**

இல்லை. பொதுவாக எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் மக்கள் தாங்கள் சட்டப்பூர்வமாக செய்யும் வேலைகளுக்கு செல்லும்பொழுது தடுக்கக்கூடாது. ஆனால் யாராவது குறிப்பாக இரவு நேரங்களில், சுற்றித்திரிந்து கொண்டிருந்ததால், அது போன்ற நேரங்களில் காவல் துறையினர் அவர்களை நிறுத்தி பெயர் மற்றும் என்ன செய்கிறார்கள் என்று கேட்கலாம். ஒருவேளை நடப்பது சந்தேகப்படும்படியாகவோ அல்லது மர்மமாகவோ இருந்தால், அவர்கள் கைது செய்யப்படலாம், காவல் துறையினரின் இந்த அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுவதை எல்லா சீர்திருத்த குழுக்களும் வன்மையாக கண்டிக்கின்றன.

**75. ஒரு காவல்துறை அதிகாரி என்னை ஊர்வலத்தில் பங்கெடுக்கும்போதோ அல்லது ஒரு தெருகூட்டத்தில் இருக்கும்பொதோ தடுக்கமுடியுமா?**

ஒரு அமைதி ஊர்வலம் போகும்போது தங்களை யாரும் தடுக்க முடியாது.



ஆனால் ஒரு ஊர்வலம் தொடங்குமுன் காவல் துறையிடம் முன்னனுமதி பெறவேண்டும். ஆனால் அந்த ஊர்வலத்தின் மூலம் சீர்கேடோ அல்லது வன்முறையோ ஏற்படும் என்று உணர்ந்தால் அனுமதியை மறுக்கவோ அல்லது கூட்டத்தை நிறுத்தவோ முடியும். ஒருவேளை கூட்டம் சிறிது நேரம் கழித்து சீர்கெட்டால் அதனைத் தடுக்கவும் மக்களைக் கலைந்து செல்ல சொல்லவும் முடியும். நிலைமையை அமைதியாக வைத்திருப்பதே காவல் துறையின் கடமையாகும். அதே நேரத்தில் குடிமக்களின் அடிப்படை உரிமையான அமைதியான பொது கூட்டங்கள் நடத்துவதற்காக வழிவகை செய்வதும் காவல் துறையின் கடமையாகும்.

**76. காவல் துறையினர் ஒருதெருக் கூட்டம் அல்லது ஊர்வலத்தை தடுக்க பலத்தை உபயோகிக்கலாமா?**

ஆம். அவர்கள் எது செய்தாலும் காரணத்துடன் இருக்க வேண்டும். அவர்கள் இருப்பது மக்களை தண்டிப்பதற்காக அல்ல. அவர்கள் பொது மக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்ட சீர்குலைவு ஏற்படாமல் தடுக்கவும் வேண்டும். எனவே காவல் துறையினர் பலத்தை ஒரு கடைசி யுக்தியாகத்தான் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தினாலும், குறைவாகவும், சந்தர்ப்பத்துக்கு தகுந்தாற்போலும் ஆரம்பத்தருணத்திலேயே கைவிடல் வேண்டும். பொதுவாக நிர்வாக நடுவர் அல்லது காவல் நிலைய பொறுப்பு அதிகாரி, அவர் இல்லையெனில் துணை ஆய்வாளர் பதவிக்கு குறையாமல் இருக்கும் யாராவது ஒருவர் மட்டுமே பலத்தை உபயோகிக்கும் ஆணையை அளிக்க முடியும்.



**77. காவல் துறையினர் அவர் விருப்பம்போல் தூப்பாக்கி சூடு நடத்த முடியுமா?**

இல்லை. இது போன்ற உயிருக்கு ஆபத்தான யுக்தியை மிக அரிய சந்தர்ப்பங்களில், அதாவது அனைத்து யுக்திகளும் பயன்படுத்தி அவைகள் அனைத்தும் பயனற்றுப்போன பிறகுதான் கையாள வேண்டும். அதுவும் ஒரு நிர்வாக நடுவர் அல்லது காவல் நிலைய பொறுப்பு அதிகாரி அங்கீகரித்த பிறகு தான் நடத்த முடியும்.

**78. ஒரு கூட்டம் அடங்காமலும் கற்களை வீசியும் பொருட்களுக்கு சேதம் விளைவிக்கும் போதும் காவல்துறை என்ன செய்ய வேண்டும்?**

மக்களையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டியது காவல் துறையின் கடமையாகும். ஆனால் அவர்களது நடவடிக்கை முறைப்படிதான் இருக்க வேண்டும். முதலில் அந்த கூட்டத்திற்கு கலைந்து செல்லுமாறு எச்சரிக்கை தொடர்ந்து விடப்பட வேண்டும். அந்த எச்சரிக்கைகளுக்குப் பிறகு தண்ணீர் புகை குண்டுகள் மற்றும தடிஅடி நடத்த உத்தரவு இட வேண்டும், தடிஅடி தலையிலோ அல்லது தோள்பட்டயிலோ செய்யக்கூடாது. இடுப்பிற்கு கீழ் தான் நடத்தப்பட வேண்டும். ஒருவேளை காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்த உள்ளார்களாயின், துப்பாக்கிச் சூடு நடத்த உள்ளதாக போதுமான முன் எச்சரிக்கை அளிக்கப்பட வேண்டும். இங்கேயும் மிகக்குறைந்த அளவிலான சக்தியே பயன்படுத்த வேண்டும். எனவே தூப்பக்கிச்சூடு மிக அதிக கூட்டமான இடத்திலும், கீழ் நோக்கியவாறு உயிர்ச்சேதம் ஏற்படாமலும் கூட்டத்தைக் கலைக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தான் நடத்தப் பட வேண்டும். கூட்டம் கலையக்கலைய தூப்பக்கிச் சூடு கைவிடப்பட வேண்டும். காயப்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் ஒவ்வொரு அதிகாரியும் நடவடிக்கையில் தங்கள் பங்கு என்ன என்பதை தெரிவிக்க வேண்டும்.

**79. காவல்துறை என்னை ஒரு ரகசியமான இடத்தில் அடைத்து வைத்து என்னை பிடித்து வைத்திருப்பதை யாரிடமும் சொல்லாமல் இருக்க முடியுமா?**

இல்லை. இதனை காவல்துறை அடிக்கடி செய்கிறது, ஆனால், இது சட்டத்திற்க்கு எதிரானது. காவல்துறை தங்களை கைது செய்த உடனேயே, தங்களின் உயிரும் உடைமையும் அவர்களது பொறுப்பு. உங்களுக்கெதிராக ஏதும் உரிமை மீறல்கள் அல்லது அவமரியாதை ஏற்பட்டால் அதற்கு காவல்துறையே பொறுப்பு, இது மிக முக்கியமான கவனத்தில் கொள்ளவேண்டிய ஒரு சட்ட கூறு.

அடுத்து, காவல் துறையினர் யார்யார் காவல் நிலையத்திற்கு வந்தனர் என்பதை பொது பதிவேட்டில் பதிவு செய்து, அதில் எப்பொழுது அவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டனர், எப்பொழுது கைது செய்யப்பட்டனர் என்ற விவரங்களை பதிவு செய்ய வேண்டும். புலன் விசாரணை



அதிகாரியின் வழக்கு பதிவேடு இதுவேயாகும். காவல்துறை கட்டுப்பாட்டு அறை கடந்த 12 மணி நேரத்தில் யார் யார் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்பதையும் அறியும் வகையில் தெரிவிக்கை செய்ய வேண்டும். இறுதியாக தாங்கள் ஒரு வழக்கறிஞரை தொடர்பு கொள்ளவும், தாங்கள் இருக்கும் இடம் தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**80. ஒரு காவல்துறை அதிகாரி என்னை காவல் நிலையத்தில் அடைத்து வைக்கலமா? அல்லது நான் விரும்பும் போது வெளியேரலாமா?**

பொதுவாக தாங்கள் முறையாக கைது செய்யப்படவில்லையென்றால், தங்களை தங்கள் விருப்பத்திற்க்கு மாறாக அடைத்து வைக்க முடியாது. தங்களை காவல் துறையினர் விசாரிக்க அழைத்தால், நீங்கள் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். ஆனால் அந்த விசாரணை சரியானதாகவும், திறமையானதாவும் முடிவில்லாமல் இழுக்காமலும் இருக்க வேண்டும். காவல்துறை தங்களை தேவை இல்லாமல் காவல் நிலையத்தில் காக்க வைக்கக்கூடாது. அது போன்ற சந்தர்ப்பங்களில் தாங்கள் நினைத்த சமயம் வெளியேரலாம்.




**81. ஒருவேளை காவல் துறையினர் என்னை வெளியே போக விடவில்லையென்றால் என்ன செய்ய வேண்டும்?**

தாங்கள் முறையாக கைதாகவில்லையெனில், தங்களை ஒரு நிமிடம் கூட பிடியில் வைப்பது கடுமையான குற்றம். அது சட்டவிரோத காவல் எனப்படும். மேலும் இதனைப் பற்றி தங்கள் குடும்பத்தாரோ அல்லது நண்பர்களோ, உயர் அதிகாரி அல்லது நீதித்துறை நடுவருக்கு புகார் செய்யலாம். எல்லாவற்றையும் விட தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ, நண்பர்கள் மூலமாகவோ, குடும்பத்தார் மூலமோ உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ அணுகி ஆட்கொணர்வு மனு (Habeas Corpus Petition) தாக்கல் செய்யலாம்.

**82. ஆட்கொணர்வு மனு (Habeas Corpus petition) என்பது என்ன?**

இது சக்தியுள்ள மன்னர்களிடமிருந்து மக்களைக் காக்கும் ஒரு மிக பழமையான தீர்வு. இதற்கு அர்த்தம் 'உடலை கொண்டு வா'. சட்ட விரோத காவலுக்கு எதிராக கிடைக்கக்கூடிய சிறப்பு தீர்வு. இந்த தீர்வு பொதுவாக உயர்நீதி மன்றத்திலோ அல்லது உச்சநீதி மன்றத்திலோ அவசர தேவைகளில் வழங்கப்படும். நீதிமன்றத்துக்கு அந்த பாதிக்கப்பட்டவர் கடைசியில் காவல் துறையின் கட்டுப்பாட்டில் காணப்பட்டார் என்று தகவல் கிடைத்தால், உடனடியாக அவரை கொண்டுவர காவல்துறைக்கு ஆணையிடும். மேலும் அவரது காவல் சட்டப்படியனதல்ல என்று தெரிந்தால், அவரை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று ஆணையிடும். சட்ட விரோத காவலாக இருக்கும்பட்சத்தில், இழப்பீடு வழங்கப்படவும் வாய்ப்புள்ளது.

**83. ஒருவர் சட்டதிற்கெதிராக கைது செய்யப்பட்டு, எங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் என தெரியவில்லையெனில் அவரை கண்டுபிடிக்க என்ன செய்ய வேண்டும்.**

நீங்கள் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் காவல் நிலையத்திற்கு விண்ணப்பித்து அந்த நபரைப் பற்றி கேட்கலாம். இது ஒரு நபரின், வாழ்க்கை மற்றும் சுதந்திரத்தைப் பொறுத்த விஷயம் என்பதால் காவல்துறை 48 மணி நேரத்துக்குள் பதிலளிக்க வேண்டும்.

**84. சரியான காரணங்கள் இல்லாமல், காவல் துறை அதிகாரி என்னை கைது செய்ய முடியுமா?**

இல்லை. காவல் துறை போதிய காரணங்கள் இல்லாமல் உங்களை கைது செய்ய முடியாது. உதாரணத்திற்க்கு ஒருவர் கையும் களவுமாக மாட்டிக்கொண்டால் கைது செய்யலாம். கைது செய்ய ஒரு நல்ல காரணமிருக்க வேண்டும். யாராவது ஒருவர் உங்கள் பெயரை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டால் மட்டும் அது கைது செய்ய ஒரு நல்ல காரணம் அல்ல. அதற்கும் மேல் சில ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே கைது செய்ய முடியும். இரண்டாவதாக, ஒரு நபர் ஏழு வருடங்களுக்குள் மட்டுமே தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தை புரிந்திருந்தால், அந்த நபரை தவறுகள் செய்யாமல் தடுக்கவும் ஆதாரங்களை அழிக்காமல் தடுக்க வேண்டும் என்றும் நிரூபித்தால் மட்டும்தான் கைது செய்ய முடியும். அதிகாரிகள் கைது செய்ய அல்லது கைது செய்யாமலிருக்க முடிவெடுக்கும் போது எழுத்து பூர்வமான காரணம் தெரிவிக்க வேண்டும்.

**85. நான் குற்றம் புரிந்ததாக காவல் துறையினர் சந்தேகித்தால் எனது குடும்பத்தாரையும் கைது செய்யலாமா?**

இல்லை. கூட இருப்பது மட்டுமே குற்றமாகாது. ஒவ்வொருவரின் குற்றத்தன்மை அல்லது குற்றமற்ற நிலை அவரது தனிமனித நடவடிக்கைகள் மூலமே கண்டுகொள்ளமுடியுமே தவிர, அவர் சந்தேகத்திற்குரியவரின் உறவினர் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட முடியாது. காவல் துறை ஒரு நபரின் குடும்பத்தாரையோ அல்லது நண்பர்களையோ பேரம் பேசும் கருவியாக பயன்படுத்தக்கூடாது. இது போன்ற செயல்கள் கடுமையான குற்றங்களான சட்டவிரோத காவல் மற்றும் ஆட்கடத்தலுக்கு சமமாகும். வழக்கு எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதை சமாளிப்பதர்காக சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு குற்றம் புரிந்தவருக்கு சிரமத்தை ஏற்படுத்தி அவரை உண்மையை ஒப்புக்கொள்ளவைக்க முடியாது. ஏதாவது குற்றம் புரிந்திருக்கிறார் என்று நியாயமாக சந்தேகிக்கப்படும் நபரை மட்டும் தான் கைது செய்ய முடியும்.



**86. பெண்களை கைது செய்வதற்கும் நடத்துவதற்கும் வழிமுறைகள் உள்ளனவா?**

நிச்சயமாக ஆம். எந்த ஒரு பெண்ணும் அந்தி சாய்ந்த பின்னும் சூரிய உதயத்திற்கு முன்பும் சரியான காரணமில்லாமல் கைது செய்யப்படக் கூடாது. மேலும் நீதித்துறை நடுவரிடம், சரியான காரணங்களை விளக்கி, அவர் சம்மதித்த பிறகு, அவரின் ஆணைப்படி மட்டுமே அவ்வாறு கைது செய்ய முடியும். கைது செய்யும்பொழுது ஒரு பெண் காவல் அதிகாரியும் உடனிருக்க வேண்டும். அந்த பெண் காவல் நிலையத்தில் தனி முடக்கத்தில் வைக்கப்பட வேண்டும். ஏதேனும் உடல்

பரிசோதனை என்றால் ஒரு பெண் அதிகாரியாலோ, அல்லது பெண் மருத்துவராலோ செய்யப்பட வேண்டும்.

**87. குழந்தைகளுக்கென தனி வழிமுறைகள் உள்ளனவா?**



பொதுவாக 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளை சட்டப்படி குற்றவாளியென கருதக்கூடாது. எனவே அவர்களை காவல்துறை கைது செய்யக்கூடாது. 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை விசாரிக்க, பிடிக்க, தடுக்க, விடுதலை செய்ய ஜாமீன் பெறுதல் பற்றி இளவர் நீதி மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2002இல் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்பட்ட அதிகாரிகளை கொண்ட ஒரு இளவர் குழு இருக்க வேண்டும். காவலில் எடுக்க இயலாத இளவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு இவர்களின் பொறுப்பாகும். அந்தக் குழந்தையை அவர் பெற்றோரிடம் பிணையில் ஒப்படைக்க வேண்டும். அவருடைய பெற்றோர் இல்லையெனில், சிறார் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் வரையில் அவர்களுக்கு கெட்ட சாவகாசம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, அவர்களை குழந்தைகள் காப்பகத்தில் வைக்க வேண்டும். சட்டம் சொல்லும் முக்கிய கொள்கை என்னவென்றால் அனைத்து நடவடிக்கைகளும், அந்த சட்டமுரணான குழந்தையின் நல்வாழ்விற்கும், திருந்துவதற்கும் வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டும்.

**88. ஒரு காவல் துறை அதிகாரி என்னை கைது செய்தபின் அவர்கள் விருப்பப்படி வைத்துக் கொள்ளலாமா?**

கண்டிப்பாக முடியாது. ஒரு நபரை காவல்துறை வைத்துக்கொள்ளக்கூடிய அதிகபட்ச நேரம் 24 மணி நேரம். அதுவே அதிகபட்ச அளவாகும். காவல்துறை 24 மணி நேரத்திற்குள் அந்த நபரை நீதித்துறை நடுவர் முன்னிலையில் அனைத்து ஆவணங்களுடன் முன்னிறுத்த வேண்டும்.

**89. பிறகு எவ்வாறு காவல்துறை ஒருவரை வெள்ளிக்கிழமை மாலை கைது செய்து திங்கட்கிழமை காலை வரை பிடியில் வைக்க முடிகிறது?**

இந்த சட்டவிரோத முறைக்கு காவல் துறை சொல்லும் காரணம் என்னவென்றால், நீதித்துறை நடுவர் வார முடிவில் இருக்கமாட்டார்கள் என்பதாகும். உண்மையில் நீதித்துறை நடுவர் என்பவர் 24 மணி நேரமும் பணியில் இருப்பவர். ஒருவரை கைது செய்த 24 மணி நேரத்திற்குள் அது இரவு நேரமாக இருப்பினும் அந்த நபரை நீதித்துறை நடுவர் இல்லத்தில் ஆஜர் செய்ய வேண்டும். நீதித்துறை நடுவர் அவ்வாறு முன்னிறுத்தப்படும் நபரை பார்க்க மறுக்க முடியாது.

**90. நான் எங்கே இருக்கிறேன் என்று எவ்வாறு தெரிந்துகொள்வது?**

நீங்கள் காணாமல் போனால் அதற்கு சட்டத்தில் நிறைய பாதுகாப்பு முறைகள் உள்ளன. காவல் துறையினர் தங்களை கைது செய்ததும் சட்டப்படி பல கடமைகளை அவர்கள் செய்யவேண்டும். அவர்கள் உடனடியாக கைது மெமோ தயாரித்து அதனை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும். மேலும் அந்த நபர் சொந்தமாகவோ அல்லது சட்ட உதவி மையம் மூலமோ வழக்கறிஞர் நியமித்துகொள்ள இருக்கும் உரிமையை கூற வேண்டும். தங்களது குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு தங்களது இருப்பிடம் பற்றி தகவல் அளிக்க வேண்டும். இந்த அனைத்து பாதுகாப்பு முறைகளும் காவல் துறையினர் சட்டத்தை தவறாக பிரயோகம் செய்யக்கூடாது என்பதற்க்காக சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். ஒருவேளை



இவைகளை காவல் துறையினர் சரிவர பின்பற்றவில்லையென்றால், நீதிமன்றத்துக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். கூடுதலாக, ஒவ்வொரு மாவட்ட காவல்துறை கட்டுபாட்டு அறைக்கு முன்பும் கைதானவர்களின் பெயர்கள் மற்றும் விலாசம் மற்றும் கைது செய்த அதிகாரியின் பெயர் மற்றும் பதவி ஆகியவை மொத்தமாக பட்டியலிட வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் தலைமை கட்டுப்பாடு அறையிலும் கைதானவர்கள் மற்றும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் பற்றிய ஒரு தகவல் பலகை வைத்திருக்க வேண்டும்.

**91. கைது மெமோ (Arrest Memo) என்றால் என்ன?**

அது சட்டவிரோத கைதுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு அம்சமாகும். மெமோவில் தங்களது பெயர், கைது நடந்த தேதி, மற்றும் கைதானதற்கான காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அது சரியான ஆவணம் என்பதை நிரூபிக்கும் பொருட்டு, அதில் கைது செய்தவர், இரண்டு சாட்சிகள் மற்றும் கைது செய்யப்பட்டவரின் கையெழுத்து இருக்கும். தங்களை நீதித்துறை நடுவர் சந்திக்கும் பொழுது கைது மெமோவில் இருக்கும் சங்கதிகளை மீண்டும் சரிபார்ப்பார். காவல் துறையினர் ஆய்வு மெமோவும் (Inspection memo) தயாரிக்க வேண்டும்.

**92. ஆய்வு மெமோ (Inspection Memo) என்றால் என்ன?**

தாங்கள் கைதாகும்பொழுது தங்களின் உடல் நிலையைப் பற்றிய ஒரு சிறு அறிக்கையே ஆய்வு மெமோவாகும். தங்களின் உடல்நிலையை, தங்களுக்கு ஏற்பட்ட சிறு மற்றும் பெரும் காயங்களைப் பற்றி பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். அது தங்களாலும், கைது செய்த அதிகாரியாலும் கையெழுத்திடப்பட்டு, தங்களுக்கு ஒரு நகல் வழங்கப்பட வேண்டும். ஆய்வு மெமோ-வுக்கும் கைது மெமோ-வுக்கும் உள்ள வித்தியாசம் யாதெனில், ஆய்வு மெமோ கேட்டுக்கொள்வதன் மூலம் மட்டுமே கிடைக்கும். நீங்கள் குறிப்பிட்டு அதை கேட்டுக் கொள்ளவில்லையெனில் அது தங்களுக்கு கிடைக்காது. தாங்கள் கைதாகியிருக்கும் பொழுது தங்களை தாக்குதல்கள் மற்றும் வன்கொடுமையிலிருந்து காக்கும் பொருட்டு இந்த நடைமுறை உள்ளது. ஆனால் உங்களை யார் ஆய்வு செய்வார் என்பது தெளிவில்லாமலிருக்கிறது. கைது செய்த அதிகாரியே தங்களை ஆய்வு செய்யும் போது தங்களுக்கு ஒரு சிறிய அளவிலான பாதுகாப்பே கிடைக்கும். ஆனால் தங்களை முதல்முதலாக நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர் செய்யும்பொழுது மற்ற ஆவணங்களுடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் சான்றும் வழங்கப்பட வேண்டும். எனவே, ஒரு மருத்துவர் தங்களின் உடல் நிலைப் பற்றி அறிக்கை கொடுக்க வேண்டும்.

**93. இவைகள் அனைத்தும் எவ்வாறு தெரிந்து கொள்வது?**

சட்டப்படி காவல்துறை தங்களை கைது செய்யும் பொழுது தங்களின் உரிமைகள் அனைத்தையும் தங்களுக்கு விளக்கிக் கூற வேண்டும். மேற்கண்ட இந்த பாதுகாப்பு அம்சங்கள் டி.கே பாசு வழக்கின் வழிகாட்டுதல் நெறிமுறைகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகள் உச்சநீதி மன்றத்தால் உருவாக்கப்பட்டவைகளாகும். மேலும் இவை அனைத்து காவல் நிலையங்கள், மற்றும் காவலர் பணி நடைபெறும் இடங்களிலும் தெளிவாக அறிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**94. காவல் துறை பாதுகாப்பில் இருப்பவரை காவல்துறை அதிகாரி அடிக்கலாமா?**

இல்லை. காவலில் உள்ள பொழுது தங்களை அடிக்கவோ, அறையவோ அல்லது பயமுறுத்தவோ கூடாது. அது சட்ட விரோதமானது மற்றும் அந்த காவல்துறை அதிகாரி தண்டிக்கப்படுவார்.

**95. ஒரு காவல் துறை அதிகாரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கச்சொல்லி வற்புறுத்த முடியமா?**

இல்லை. ஒரு காவல் துறை அதிகாரிக்கு தங்களை விசாரிக்க அனைத்து உரிமையும் உண்டு. ஆனால் தங்களுக்கு தெரியாத ஒரு தகவலையோ அல்லது செய்யாத குற்றத்தை பற்றி வாக்குமூலம் அளிக்கச்சொல்லியோ வற்புறுத்த முடியாது. மேலும் ஒரு காவல்துறை அதிகாரி முன் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்தில் செல்லுபடியாகாது.



**96. பல கட்டுப்பாடுகளை விதிக்கும்போது காவல்துறையால் குற்றவாளிகள் கைது செய்யும் பணியை சரிவர செய்ய முடியுமா?**

முதலில் ஒருவரை குற்றம்புரிந்தவரா அல்லது குற்றமற்றவரா என்று தீர்மானிப்பது காவல்துறையினரின் கடமையே அல்ல. காவல் துறையினரின் கடமை சந்தேகபட்டவரை அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரை கைது செய்வதுதான். ஆனால் அந்த நபருக்கெதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டது போல பாவித்து அவர்களுக்கு தண்டனை கொடுப்பது போல் நடந்து கொள்ளக் கூடாது. அது நீதிமன்றங்களின் பணியாகும். மேலும் காவலிலுள்ள அனைவருக்கும் பொய் குற்றச்சாட்டுகளிலிருந்து மற்றும் தரக்குறைவாக நடத்துவதிலிருந்து பாதுகாப்பு தரப்பட வேண்டும். எனவே தான் இவ்வளவு கட்டுப்பாடுகள் உள்ளன. உண்மையில் அவைகள் கட்டுப்பாடுகள் அல்ல, அனைவருக்கும் நீதிமன்றத்தில் நியாயமான வாய்ப்பு கிடைப்பதற்காகவே விதிக்கப்பட்டுள்ளன.

**97. குற்றம் சுமத்தப்பட்டவருக்கு அதிக உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளனவா? பாதிக்கபட்டவரின் நிலைமை என்ன?**

பொதுவாக மக்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி யாரும் கண்டு கொள்வதில்லை என நினைக்கின்றனர். ஆனால் மொத்த அரசும் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக உள்ளது. பாதிக்கப்பட்டவரின் பொருட்டே அரசு குற்றம் சுமத்தப்பட்டவர்களை தேடிக் கண்டுபிடிக்கிறது. பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாகவே அரசு, அரசு வழக்கறிஞரை நியமிக்கின்றது. பாதிக்கப்பட்வரின் சார்பாகவே, அரசு குற்றவாளியை தண்டிக்கிறது. ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவர் ஒரு தனிநபராகவே உள்ளார். சில சமயங்களில் அவர் குற்றமே புரிந்திருக்க மாட்டார். எனவே, அரசின் அதிகாரத்திற்கும், குற்றம் சுமத்தப்பட்டவருக்கும் இடையே ஒரு சமநிலையை உருவாக்கவே, குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு, சட்டம் பல பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் இயலாதவர்களுக்கு இலவச சட்ட உதவி போன்ற வசதிகளும் வகுத்து வழங்கியுள்ளது.

**98. காவல் துறையிடமிருந்து ஜாமீன் பெற முடியுமா?**
அது அந்த வழக்கைப் பொறுத்தது. ஜாமீன் கிடைக்கக்கூடிய குற்றங்களில் (Bailable Offences) கைது செய்யப்பட்டிருந்தால் காவல்துறையே வழங்கமுடியும். நீங்கள் ஜாமீன் கிடைக்காத குற்றத்திற்காக (Non Bailable Offences) கைது செய்யப்பட்டிருந்தால், சில வகை குற்றங்களில் மட்டுமே காவல்நிலைய பொறுப்பதிகாரியால் ஜாமீனில் விடுதலை செய்ய முடியும்.

**99. ஜாமீன் கிடைக்கக்கூடிய குற்றங்கள் (Bailable Offences) மற்றும ஜாமீன் கிடைக்கா குற்றங்கள் (Non Bailable Offences) யாவை என்று தெரிந்திருப்பது அவசியமா?**
ஆம், ஜாமீன் கிடைக்கக்கூடிய குற்றங்கள் யாவும் கடுமையானவை அல்ல. அதில் ஜாமீன் தங்களின் உரிமையாகும். அது போன்ற வழக்குகளில், உடனடியாக ஜாமீன் கொடுக்கப்பட வேண்டும். ஜாமீன் கிடைக்கா குற்றங்கள் கடுமையானதாகவும் அது போன்ற வழக்குகளில் ஜாமீன் ஒரு சலுகை மட்டுமே. சில விதிவிலக்குகள் தவிர, அனைத்து இவ்வகை வழக்குகளிலும் நீதி மன்றம்மட்டுமே ஜாமீன் வழங்க முடியும்.

**100. நான் ஒரு ஜாமீன் கிடைக்கா குற்றம்புரிந்திருந்தால், எனக்கு ஜாமீனே கிடைக்காதா?**
இல்லை. அவ்வாறு அவசியமில்லை. ஜாமீன் கிடைக்கா குற்றங்களிலும் ஜாமீன் கிடைக்கும். தாங்கள் ஜாமீனுக்காக நீதிமன்றத்தில் மனு கொடுக்க வேண்டும். நீதிமன்றம் வழக்கின் கோப்புகளை, குற்றத்தின் தன்மையைப் பார்த்து, ஒருவேளை ஜாமீனில் விடுவித்தால் நீங்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து விடுவீர்களா அல்லது சாட்சிகளை அழிப்பீர்களா அல்லது மிரட்டுவீர்களா என பார்க்கும். நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்கள் என கருதும் பட்சத்தில், தங்களுக்கு ஜாமீன் அளிக்கப்படும்.


**101. அதன் பொருட்டு நான் முழுவதுமாக விடுவிக்கப்பட்டு விட்டதாக கருதாலாமா?**
இல்லை. நீங்கள் வழக்கைச் சந்திக்க வேண்டும். மேலும் நீதிமன்றம் தான் தாங்கள் குற்றவாளியா அல்லது நிரபராதியா என்று தீர்மானிக்கும்.



# காவல் துறை
# பதவிச் சின்னங்கள்



காவல் துறை தலைமை
இயக்குனர் (DGP)



காவல் துறை
தலைவர் (IGP)



காவல் துறை
துணைத்தலைவர் (DIG)



முதநிலை காவல்துறை
கண்காணிப்பாளர் (SSP)



காவல்துறை
கண்காணிப்பாளர் (SP)



காவல்துறை கூடுதல்
கண்காணிப்பாளர் (Addl.SP)

# காவல் துறை
# பதவிச் சின்னங்கள்



இணை துணை
காவல்துறை
கண்காணிப்பாளர்
(ASP/DySP)



ஆய்வாளர் (IP)



துணை
ஆய்வாளர் (SI)



உதவி துணை
ஆய்வாளர்
(ASI)



தலைமை
காவலர் (HC)

# CHRI –ன் திட்டங்கள்

பொறுப்புணர்ச்சி மற்றும் பங்கேற்றலுக்கான உயர்ந்த கோட்பாடுகள் மற்றும் செயல்திட்டங்களின் மூலம் மட்டுமே, காமன்வெல்த் மற்றும் அதன் உறுப்பு நாடுகளில், மனித உரிமைகள், மக்களாட்சி மற்றும் வளர்ச்சி குறித்தவற்றை நனவாக்க இயலும் எனும் கருத்தின் அடிப்படையில் CHRI செயல்படுகிறது. மேலும் மனித உரிமைகள் குறித்த பிரச்சாரங்கள் மட்டுமின்றி தகவல் அறியும் உரிமைகள் மற்றும் நீதி அணுகுமுறை குறித்தும் CHRI எடுத்துரைக்கின்றது. ஆராய்ச்சிகள், பதிப்புகள், பயிற்சி வகுப்புகள், கருத்து பரப்புதல் மற்றும் எடுத்துரைத்தல் வழியாக CHRI இவற்றை செய்து வருகின்றது.

## மனித உரிமைகளுக்கான எடுத்துரைத்தல்கள்:

காமன்வெல்த் அங்கங்களுக்கும் அதன் உறுப்பினர் அரசுகளுக்கும் CHRI தொடர்ந்து அறிக்கைகள் அளித்து வருகிறது. மேலும் அவ்வப்போது CHRI உண்மை கண்டறியும் குழுக்களை (Fact Findings Missions) அமைத்து, நைஜீரியா, ஜாம்பியா, ஃபிஜி தீவுகள் மற்றும் சியாரா லியோன் போன்ற நாடுகளுக்கு 1995 முதல் அனுப்பி வருகிறது. காமன்வெல்த் மனித உரிமைகளுக்கான தொடரமைப்பையும் CHRI ஒருங்கிணைக்கிறது. அதன் மூலம் பல்வேறு குழுக்களை ஒருங்கிணைத்து மனித உரிமைகளுக்கான மொத்த அமைப்பாக உருவாக்குகிறது. CHRI ஊடக பிரிவானது, மனித உரிமைகள் பற்றிய தகவல்கள் மக்களிடையே தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக் கொள்கிறது.

## தகவல் அறியும் உரிமைக்கான அணுகுமுறைகள்:–

தகவலறியும் உரிமைக்கான சட்டங்கள் இயற்றுதல், அவற்றில் பங்களிப்பை அளித்து நல்ல நடைமுறைகளை வகுத்தல் போன்ற திட்டங்களில் அரசாங்கங்களுக்கு CHRI தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது. திட்டங்களை வகுப்பதில் எடுத்துரைத்தல், வட்டார மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் சமுதாயத்தினரிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கும் அமைப்பாக CHRI செயல்படுகிறது. CHRI தெற்காசியாவில் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுகிறது. இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவில், சமீபத்தில் கொண்டு வரப்பட்ட சட்டங்களை உருவாக்குவதில் CHRI உறுதுணையாக இருந்துள்ளது. பசிபிக் நாடுகளை பொறுத்தவரை, வட்டார மற்றும் தேசிய குழுக்களை ஒருங்கிணைத்து ஊக்குவித்து வருகிறது.

## நீதிக்கான அணுகுமுறைகள்:–

காவல்துறை சீர்திருத்தம்:-

பல நாடுகளில், காவல்துறையானது பொதுமக்களை பாதுகாக்கும் அமைப்பாக இல்லாமல், அரசு அடக்குமுறைக்கான கருவியாகவே செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக பல உரிமை மீறல்களும், நீதி மறுக்கப்படுதலும் தொடர்கின்றது. எனவே படிப்படியான காவல்துறை சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதன் மூலம் தற்போதைய நிலையிலிருந்து சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் அமைப்பாக காவல்துறையை உருமாற்றும் பணியில் CHRI தொடர்ந்து ஈடுபடுகிறது. இந்தியாவில், காவல்துறை சீர்திருத்தங்களுக்கான கருத்துருவை உருவாக்கி ஒருங்கிணைப்பதில் CHRI செயல்பட்டு வருகிறது. தெற்காசியாவில் சமூக நிர்வாகங்கள் காவல்துறை சீர்திருத்தங்களுக்கான முயற்சிகளை வலுப்படுத்த CHRI உதவுகிறது. கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் கானாவில், காவல்துறையின் பொறுப்புணர்ச்சிகள் மற்றும் அரசியல் தலையீடுகள் குறித்து CHRI ஆராய்ந்து வருகிறது.

## சிறைதுறை சீர்திருத்தங்கள்:–

பாரம்பரியமாகவே வெளிப்படை தன்மையற்ற அமைப்புகளை வெளிப்படுத்துவதிலும், அவற்றின் முறைகேடுகளை அம்பலபடுத்துவதன் அவசியத்திலும் CHRI தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. மேலும் தற்போதைய சட்ட அமைப்புகளின் தோல்விகள், அதன் காரணமாக விசாரணைக் கைதிகளால் நிரம்பி வழியும் சிறைச்சாலைகள் மற்றும் அனுமதியற்ற நீட்டிக்கபட்ட சிறைதண்டனைகள் போன்றவைகள் CHRIன் முக்கிய கவனம் பெறும் விஷயங்களாகும். இவற்றை களைவதில் CHRI முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. CHRIன் மற்றொரு முக்கிய கவனம் முற்றிலும் தோல்வியடைந்த சிறைத்துறை மேற்பார்வையிடுதலை, மறு உருவாக்கம் செய்தலாகும். இது போன்றவற்றை செயல்படுத்துவதன் மூலம் சிறைதுறை நிர்வாகம், அனைவருக்குமான நீதி பரிபாலணம் ஆகியவற்றில் முக்கிய முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற நமபிக்கையில் CHRI செயல்பட்டுவருகிறது.

# A children's book for adults to learn from

Friedrich Naumann STIFTUNG FÜR DIE FREIHEIT

USO House, 6, Special Institutional Area, New Delhi 110067, INDIA
Phone: +91-11-2686 2064/ 2686 3846 Fax: +91-11-2686 2042
www.southasia.fnst.org www.stiftung-freiheit.org

**Delegation of the European Union to India**

5/5, Shantiniketan, New Delhi - 110 021
Phone: +91-11-66781919
Fax: +91-11-66781955

Website : http://eeas.europa.eu/delegations/india/index_en.htm

இந்த அறிக்கை ஐரோப்பிய யூனியனின் நிதி உதவியால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய யூனியனின் 28 உறுப்பு நாடுகளும் படிப்படியாகத் தங்களுடைய வளங்கள் மற்றும் நோக்கங்களை இணைத்துக் கொள்ள முடிவெடுத்துள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் அவர்கள் தங்களுக்கிடையேயான கலாச்சார பன்முகத்தன்மை, சகிப்புத்தன்மை, தனிமனித சுதந்திரம் ஆகியவற்றை பராமரிக்கும் அதே வேளையில், அவர்கள் தங்களுக்கான ஸ்திரத்தன்மை, மக்களாட்சி மற்றும் நிலையான வளர்ச்சி போன்றவற்றை கூட்டாக வளர்த்துக் கொண்டுள்ளனர். ஐரோப்பிய யூனியன் தங்களின் சாதனைகளையும், கோட்பாடுகளையும் தங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளுடனும் பங்கிட விரும்புகிறது.

இந்த அறிக்கையின் அனைத்து உள்ளடக்கங்களும் முழுக்கவும் CHRI ன் பொறுப்பாகும். எந்த சந்தர்ப்பத்திலும் இந்த அறிக்கையில் உள்ள கருத்துக்கள் ஐரோப்பிய யூனியனின் நிலைமைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படாது.

**COMMONWEALTH HUMAN RIGHTS INITIATIVE**

55A, Third Floor, Siddharth Chambers, Kalu Sarai, New Delhi 110 016, INDIA
Tel: +91-11-4318-0200, 4318-0201
Fax: +91-11-4618-0217
info@humanrightsinitiative.org; www.humanrightsinitiative.org